# தமிழும் சமஸ்கிருதமும்

8

டாக்டர் ம.பொ.சிவஞானம்

பூங்கொடி
பதிப்பகம்

# தமிழும் சமஸ்கிருதமும்

சிலம்புச்செல்வர்
டாக்டர் ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

முதற் பதிப்பு : டிசம்பர் 1984
உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. 4-50

குரு அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-600005.

# முன்னுரை

தமிழும் சமஸ்கிருதமும் இந்தியாவின் புராதன மொழிகளாகும். தமிழிலுள்ள சங்ககால இலக்கியங்களிலே தமிழ்-சமஸ்கிருத மொழிகளிடையில் நிலவிய உறவு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இடைக் காலத்தில் தோன்றிய சைவ ஆசாரியர்களும் வைணவ ஆழ்வார்களும் தமிழ்-சமஸ்கிருத மொழிகளிடம் பற்றுக் கொண்டிருந்ததை அவர்கள் புனைந்துள்ள பாடல்களிலே காண முடிகிறது இறைவனை, 'ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்' என அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார். வட மொழியிலுள்ள நால் வேதங்களின் கருத்துக்களைத் தமிழில் பாடினார் என்னும் பொருளிலே 'வேதந் தமிழ் செய்த மாறன் சடகோபன்' என்று சடகோபாழ்வாரை வைணவர்கள் பாராட்டுகின்றனர்.

உண்மை நிலை இதுவாக இருந்தும், பிற்காலத்தில் தமிழ்-சமஸ்கிருதப் புலவர்களிடையில் பூசல் தோன்றியது. பின்னர் அதிலே "அரசியல்" புகுந்து ஆட்டம் போடத் தொடங்கி விட்டது. இந்த மொழிப் பூசலால் பிரிவினைச் சக்திகள் வலுப்பெற்று, தமிழ் மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி வலுவிழந்து வருவதையும் கண்டு வருகிறோம்.

தமிழ் - சமஸ்கிருத மொழிகள் பற்றித் தவறான கருத்துக்கள் புலவர்களிடையிலும் அரசியல்வாதிகளிடத்திலும் நிலவி வருகின்றன.

இந்தியாவின் புராதன மொழிகளான தமிழ்-சமஸ்கிருத மொழிகளிடையில் பூசல்கள் நீடிப்பதானது, இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடிழைத்து வருகிறது.

ஆகவே, தமிழ்-சமஸ்கிருத மொழிகளைப் பற்றித் தமிழரிடையில் நிலவி வரும் தவறான எண்ணங்களைப் போக்குவதற்கான நூல் ஒன்றை எழுதித் தமிழர் கைகளிலே தர வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. அதன் விளைவாக, 1960ல் "தமிழும் கலப்படமும்" என்னும் நூலை எழுதி வெளியிட்டேன். அது போதுமானதல்ல என்று கருதினேன்

நல்ல வேளையாக, 26—8 84ல் இந்தியா முழுவதிலும் 'சமஸ்கிருத தினம்' கொண்டாடப்பட்டதை யொட்டி, சென்னையில் நடைப்பெற்ற—தமிழிலும் சமஸ்கிருதத்திலும் புலமையுடைய அறிஞர்கள் நிறைந்த—கூட்டத்தில் பேச வாய்ப்புப் பெற்றேன். சென்னை மாநிலக் கல்லூரியில் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் திரு சம்பத் அவர்களால் அந்த அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந்தக் கூட்டத்திலே தமிழ்—சமஸ்கிருத மொழிகளிடையிலான உறவு பற்றிய என் கருத்துக்களை நான் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்திப் பேசினேன். அதைக் கேட்டவர்கள், அந்தப் பேச்சைச் சற்று விரிவுபடுத்தி நூலாக வெளியிட வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டனர். அதன்படி, 'செங்கோல்" வாரப் பத்திரிகையிலே 11—9—83 முதல், 11-12—83 வரை வெளியான இதழ்களிலே தொடர்ந்து எழுதி வந்தேன். அதனை, பூங்கொடிப் பதிப்பகத்தார்' நூலாக வெளியிட்டுள்ளனர் அந்தப் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே சுப்பையாவுக்கு எனது நன்றி உரித்தாகுக இந்நூலைப் படிப்போர், இதற்கு முன்பு யான் எழுதி வெளிவந்துள்ள "தமிழும் கலப்படமும்" என்னும் நூலையும் வாங்கிப் படித்தால், தமிழ் சமஸ்கிருத உறவு பற்றிய எனது கருத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியும்.

சென்னை
1—12—84

# தமிழும் சமஸ்கிருதமும்

நான் நம் தாய்மொழியான தமிழிடத்துப் பற்றுடையவன். ஆயினும், சமஸ்கிருதம் போன்ற வேறு மொழி எதனிடமும் பகைமை கொள்ளாதவன் சமஸ்கிருதம் பேச்சு மொழியல்ல; நம்மிலே யாருக்கும் அது அன்றாட வாழ்க்கை மொழியும் அல்ல. காரணம், அது பேச்சு மொழியாக இல்லாததுதான். ஆயினும், நம்முடைய நாட்டு மொழிகளிலே சமஸ்கிருத மொழியும் ஒன்றாதலால், தமிழுக்கு அடுத்தபடியாக அதனை நான் நேசிக்கிறேன்.

## கலாசாரப் பொதுமொழி

இந்தியனாகிய நான் குமரிமுதல் காஷ்மீரம்வரை பரவிக் கிடக்கிற பாரத நிலப்பரப்பிலே ஒவ்வொரு அங்குலத்தின் மீதும் சொந்தங் கொண்டாடுகிறேன். அதுபோல், பாரத நாட்டிலுள்ள ஒவ்வொரு மொழியையும் எனது சொந்த மொழியாகக் கருதுகிறேன், ஆனால், தமிழ் மொழியை எனது தாய் மொழியாகக் கருதுகிறேன், அது என் வாழ்க்கை மொழியாக அமைந்து விட்டதால். 'இந்தியன்' என்ற முறையிலே-'இந்து' என்ற வகையிலே சமஸ்கிருதம் எனது கலாசார மொழியாக இருந்து வருகிறது.

நான் பிறந்த நாட்டால் இந்தியனாகவும் பின்பற்றும் மதத்தால் இந்துவாகவும் இருந்தும் சமஸ்கிருதம் பயிலாதது பயிலக் கூடாதென்ற எண்ணத்தாலன்று. நான் என் தாய் மொழியான தமிழிலே புலமை பெற்றதே 35 வயதிற்கப்புறம் நானே முயன்று படித்துத்தான்.

2ஆவது வகுப்பில் தேர்வு பெற்றதோடு எனது பள்ளிப் படிப்புக்குப் புள்ளி விழுந்து விட்டது. வறுமை காரணமாக! இதே

காரணத்தால்தான் ஆங்கிலத்திலும் நான் போதிய புலமை பெற முடியாமற் போய்விட்டது.

தமிழிலே காலங்கடந்தேனும் 35 வயதிற்குப் பிறகு நானே படித்துப் புலமை பெற முடிந்ததும் தாய்மொழியானதாலும் தமிழ் நாட்டவரின் பேச்சு மொழியானதாலும்தான். சமஸ்கிருதம் அப்படிப்பட்ட மொழியல்ல; கலை மொழி-கலாசார மொழி. அதனுற்றான், இராமனைப்பற்றிக் கூறும் கம்பர், 'தென்சொற் கடந்தான்; வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்கிருர்,

நான் ஆங்கிலத்தில் போதிய புலமை பெருததற்காக வருந்தவில்லை: சமஸ்கிருதத்தில் புலமை பெருததற்காக வருந்துகிறேன். ஆங்கிலப் புலமையால் வாழ்க்கை வசதிகளைப் பெறலாம்—அவ்வளவுதான்! ஆனல், சமஸ்கிருதப் புலமையால் ஆன்மிக ஞானம் பெறலாம். சமஸ்கிருதம் பயின்றிருந்தால் தமிழ் மொழிக்கு இப்போது செய்வதைவிடவும் அதிக அளவு தொண்டு செய்ய முடிந்திருக்குமென்று நம்புகிறேன். இதன் பொருளை தெய்வ நம்பிக்கையும் இந்து மதத்திலே பற்றும் உடையவர்கள் தான் புரிந்துகொள்ள முடியும்,

## சமஸ்கிருத நூல்களைத் தமிழன்மூலம் பயின்றேன்

நான் சமஸ்கிருத மொழியைப் பயிலவில்லையென்ருலும், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சமஸ்கிருத நூல்களில் பலவற்றைப் படித்திருக்கிறேன், சமஸ்கிருதத்திலிருந்து எத்தனை நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்துள்ளனவோ எனக்குத் தெரியாது. ஆனல், எனக்குத் தெரிந்த நூல்களையெல்லாம் நான் தேடிப் பிடித்துப் படித்து அவற்றை எனது நூலகத்தில் பாதுகாத்தும் வருகிறேன்.

வான்மீகி ராமாயணம் சொல்லுக்குச்சொல் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இருமொழிகளிலும் வெளிவந்திருக்கிறது. அதுபோல, வியாச பாரதம் சமஸ்கிருதத்தி

லிருந்து சொல்லுக்குச்சொல் திரு ம. வீ. இராமாநுஜாச்சாரி யாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கிறது.

இந்த மொழி பெயர்ப்புகளைப் படித்து கம்ப ராமாயணத் துடன் வான்மீகி ராமாயணத்தை ஒப்பு நோக்கி, பல ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். இந்த ஆண்டு ஜூன் 26ல் எனது பிறந்த நாளில் "கம்பரின் சமயக் கொள்கை" என்னும் நூலையும் வெளியிட்டிருக்கிறேன். எனது 76ஆவது பிறந்த நாளிலே 'வில்லி பாரதத்தில் தமிழுணர்ச்சி' என்னும் பெயரில் ஒரு ஆராய்ச்சி நூலை வெளியிட்டேன்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை வியாச பாரதத்துடன் ஒப்பு நோக்கித் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளேன். அதுவும் "பாரதியார் பற்றி ம. பொ. சி. பேருரை" என்னும் எனது நூலிலே ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது. "பாஞ்சாலி சபதம்" பற்றி யான் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை யொன்று "தொல்காப்பியரிலிருந்து பாரதியார்வரை" என்னும் நூலின் ஒரு பகுதியாக வெளியாகியுள்ளது.

சமஸ்கிருதத்தில் கௌடல்(யர்சாணக்கியர்) என்ற அரசியல் ஞானியால் எழுதப்பட்டுள்ள "அர்த்த சாத்திரம்" என்னும் நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப் பட்டிருக்கிறது. அதனை எழுத்தெண்ணிப் படித்து, திருக்குறள் பொருட்பாலுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து சாணக்கியரோடு வள்ளுவரை ஒப்பிட்டுப் பார்க்க என்னால் முடிகிறது

அப்படியே, ஆரிய சமாஜத்தார் சமஸ்கிருதத்திலுள்ள வேதங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். முழுசாக அல்ல; தயானந்தரின் மத சீர்திருத்தக் கொள்கைக் கேற்ற வியாக்கியானங்களாக! இன்னும், 'ஒற்றியூரானடிமை' என்னும் புனைபெயர் பெற்றிருந்த சைவ மெய்யன்பரான இராமசாமிப் பிள்ளை யென்பவர், வட மொழியில் புலமை பெற்ற

தமிழக சந்நியாசி ஒருவரைக்கொண்டு' சாம வேதத்தின் பெரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்து "சாமவேத சங்கிதை" என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார்.

இந்த நூல்களை யெல்லாம் எத்தனையோ முறை படித்து வேத காலத்தில் பாரத மக்கள் கடைப்பிடித்த நாகரிகத்தை அறிந்து கொண்டேன். அதனுடன் சங்ககாலந்தொட்டு தமிழர் கடைப்பிடித்து வரும் நாகரிகத்தை ஒப்பிட்டு ஆராய்ந்தறியவும் என்னால் முடிகிறது.

கண்ணபெருமான் பார்த்தனுக்குப் போதித்ததாகச் சொல்லப்படும் பகவத் கீதையை எத்தனை அறிஞர்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்களோ அத்தனையையும் படித்திருக்கிறேன். வியாக்கியான ரீதியில் காந்திஜி, பாரதியார், ராஜாஜி, விநோபாஜி ஆகியோரால் எழுதப்பட்டுள்ள நூல்களையும் படித்துள்ளேன்.

திலகர் ஆங்கிலத்தில் எழுதிய "கீதா ரகஸ்யம்" என்னும் வியாக்கியான நூல் தமிழில் வெளிவந்திருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால், அமராவதி சிறை வாழ்க்கையின்போது எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தைக் கொண்டும், அம்மொழியில் மிகு புலமை பெற்றவர்களிடம் கேட்டறிந்தும் ஒரு தேசபக்தரின் பார்வையில் கீதை எப்படிக் காட்சியளிக்கிறது என்பதைக் கண்டறிந்தேன். அதிலே எனக்கு உதவி புரிந்தவர் ஆந்திர தேச பக்தர் திரு. தென்னேட்டி விசுவநாதம் அவர்கள் ஆவார்.

அப்படியே, மகாகவி காளிதாசர் சமஸ்கிருதத்தில் எழுதித் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள ரகுவமிசம், சாகுந்தலம், மேக தூதம், மாளவிகாக்கினி மித்திரம் ஆகிய நூல்களையும் படித் திருக்கிறேன்.

இன்னும், உபநிடதங்கள் மனு நீதி ஆகிய நூல்களையும் படித்திருக்கிறேன். இப்படி, நான் படித்த சமஸ்கிருத நூல்

களின் பெயர்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவது, நான் சமஸ்கிருதத்தைப் பயின்றிருந்தால் தமிழ் மொழிக்கு இன்னும் அதிகத் தொண்டு செய்திருக்க முடியும் என்பதனை நினைவூட்டத்தான்.

## சமஸ்கிருதமும் தமிழ்க் கவிஞர்களும்

கம்பர் சமஸ்கிருதத்தில் புலமை பெற்றதனால்தான் உலக மகா கவிகள் மண்டலத்தில் தலைமை பெறத்தக்க வகையிலே 'இராம காதை' என்னும் பெயரில் மாகாப்பிய மொன்றைப் படைத்துக் கொடுத்தார்.

வில்லிபுத்தூரார் வியாசபாரதத்துக்குத் தமிழில் வழி நூல் தந்ததும், திருமூலர் 'திருமந்திரம்' படைத்ததும், மெய்கண்டார் 'சிவஞான போதம்' என்ற சைவ சாத்திரத்தைத் தந்ததும், அதையொட்டி 'சிவஞான சித்தியார்' உள்பட பல சித்தாந்த சாத்திர நூல்கள் தோன்றியதும் அவற்றின் ஆசிரியர்கள் சமஸ்கிருதத்திலும் பெரும் புலமை பெற்றிருந்ததனால்தான்.

அருணகிரியார், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் ஆகிய ஞானியர் தமிழில் சாத்திரங்களுக்கு நிகரான தோத்திர நூல்களைப் படைத்துச் சித்தாந்த-வேதாந்த-சமரச சன்மார்க்கத் தத்துவங்களைத் தமிழிலும் எளிதாகச் சொல்ல முடியும் என்று காட்டியதும் அவர்களுக்கு வடமொழியில் நல்ல புலமையிருந்ததனால்தான்!

திரும்பவும் சொல்லுகிறேன், 'மதமும் தெய்வமும் தேவையில்லை; மனிதன் எப்படியும் வாழலாம்' என்று முடிவு கட்டிக் கொண்டவர்கள் நான் சொல்வதை விரும்பமாட்டார்கள்; வெறுக்கவும் செய்வார்கள். ஆனால், 'மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற நியதியை ஏற்று, அதன்படி வாழ விரும்பும் நெறியாளர்கள் சித்தாந்தம் வேதாந்தம் போன்ற

ஆன்மிகத் தத்துவங்களைப் புறக்கணிக்க முடியாது. அதன் காரண மாக சமஸ்கிருதத்தையும் அவர்கள் வெறுக்க முடியாது.

தமிழரிலே சிலருக்கேனும் சமஸ்கிருத மொழிப் புலமை தேவைப்படுவது தத்துவங்களுக்காகத்தான். சமுதாய வாழ்க் கைக்கு அம்மொழி தேவைப்படவில்லை இதற்கு நம தாய்மொழி யான தமிழிலுள்ள சங்க இலக்கியங்களே சான்றாகும். அந்த நூல்களிலும் அங்குமிங்குமாக சமஸ்கிருதச் சொற்கள் கலந் திருக்கலாம். ஆனால், தமிழைக் கொண்டே காதலும் வீரமும் கலந்த சமூக வாழ்க்கையைத் தமிழர் முழுமையாக நடத்த முடியும்.

## பேச்சு மொழியா?

சமஸ்கிருதம் தற்போதைக்குப் பேச்சு வழக்கில் இல்லாத தால், அது முன் எப்போதேனும் பேச்சு மொழியாக இருந்திருக்க முடியுமா? என்பது விவாதத்திற்குரியதாகி விட்டது. தமிழ்ப் புலவர்களிலே சமஸ்கிருதத்திடம் நல்லெண்ணமில்லாத சிலர், ‘அது செத்த மொழி’ என்று கொச்சையாகக் கூறுகின்றனர். அதனைத் தாங்கிக்கொள்ள இயலாத வடமொழிப் பண்டிதர்கள். ‘சமஸ்கிருதம் முன்னொரு காலத்தில் பேச்சு மொழியாக இருந்திருக்கிறது’ என்று சொல்வதோடு, ‘இப்போதும் சமஸ்கிருதத்தில் பேச முடியும்’ என்றும் சொல்கின்றனர். சிலர் பேசியும் காட்டுகின்றனர்.

இங்கேயும் அறிஞர் ஒருவர் சமஸ்கிருதத்தில் பேசிக் கேட்டோம். எனக்கென்னவோ அவர் பாடுவது போலத்தான் இருந்தது. இயற்கையாகப் பேசுவதுபோல் இல்லை. சமஸ்கிருதம் பேச்சு வழக்கிலிருந்து, பின்னர் அது பேசத் தகுதியற்றதாகி விட்டது என்ற கூற்றை நான் ஒப்புக் கொள்ளவில்லை.

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆதிகாவியம் எனப்படும் ராமாயணத்தை வான்மீகி தந்ததும், அதனினும் மாகாப்பியமான

பாரதத்தை வியாசர் தந்ததும், இன்னும் எண்ணற்ற வளம் பொருந்திய நாடகங்களையும் கவிதைகளையும் கொடுத்ததுமான சமஸ்கிருத மொழி, திடீரென்று எப்படிப் பேச்சு வழக்கற்றதாகி விட முடியும்? இது, மொழிபற்றிய ஆராய்ச்சிக்கே முரண்பட்ட கருத்தாகும். என்னைப் பொறுத்தவரையில் இப்போது நம்மால் பார்க்கப்படுகிற—நம்மிலே சிலரால் படிக்கப்படுகிற சமஸ்கிருத மானது முன் எந்தக் காலத்திலுமே பேச்சு மொழியாக இருந்திருக்கும் என்று நம்ப முடியவில்லை.

## புதிதாக படைக்கப்பட்ட மொழி

'சமஸ்கிருதம்' என்னும் சொல்லுக்கு 'நன்கு படைக்கப்பட்ட மொழி' என்றுபொருள் கூறப்படுகிறது. இது சரியானல், இன்று நாம் காணும் சமஸ்கிருதத்தைச் சூனியத்திலிருந்து தோன்றிய அதிசய மொழியாகக் கருதுவதற்கில்லை. பேச்சு வழக்கில் இருந்த ஒரு மொழியிலிருந்து நன்கு திருத்தப்பட்டு புதிதாகப் படைக்கப் பட்ட மொழி என்றே நான் கருதுகின்றேன். ஆனல், பேசுவதற் காகப் படைக்கப்பட்டதல்ல.

இன்று காணும் சமஸ்கிருதம் படைக்கப்படுவதற்கு முன்பு மெய்ஞ்ஞான தத்துவங்களும்—ஏன், விஞ்ஞான உண்மைகளும் கூட இந்தியாவிலுள்ள பிரதேச மொழிகளில் இருந்திருக்க வேண்டும். அம்மொழிகளில் பிரதான மொழியாக தமிழைக் கருதலாம். எந்த மொழியிலும் எழுதப்படாமல் வேதங்களும் உபநிடதங்களும் செவிவழிச் செல்வங்களாக இருந்திருக்கலாம். அவற்றை 'எழுதாக் கிளவி' என்று சொல்லுகிறார்கள். அவற்றை யெல்லாம் திரட்டித் தருவதற்கான ஒரு பொதுமொழி தேவை யென்று நம முன்னேர்கள் கருதினர்கள். அவர்கள், வேத காலத்தவராகவோ, அதற்குச் சற்று பிற்பட்ட காலத்தவராகவோ இருக்கலாம். புதிதாக சமஸ்கிருதம் படைக்க்பட்டு, பின்னர், பாரதத்திலுள்ள வேத மதத்தவர் அனைவருக்கும் அது பொது மொழியாக, கலாசார மொழியாகக் கருதப்பட்டது. மெய்ஞ்

ஞானக் கலைகளைத் தாங்கியிருந்த காரணத்தால் கடவுள் மொழியாகவும் கருதப்பட்டது.

சமஸ்கிருத நூற்களைப் படித்தால் ஏறக்குறைய ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய ஒலி உந்தியில் பிறந்து மேல்நோக்கி எழுகின்றது அத்தகைய ஒரு மொழி சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களால் பேசப்படுவதாக இருந்திருப்பது சாத்தியமில்லைதான். சமஸ்கிருதம் படைக்கப்பட்டதே மந்திர மொழியாகத்தான் என்று சொல்லுவோருமுண்டு.

தெய்வ அர்ச்சனைக்குப் பயன்படும் நாமாவளிகளோ, பக்திக்குப் பயன்படும் மந்திரங்களோ உந்தியிலிருந்து ஒலியெழுப்புகின்ற சொற்களைக் கொண்டே படைக்கப்பட்டிருக்கின்றன. அதனுல்தான் அந்த மொழி 'தேவ மொழி' என்று கருதப்படுவதாகக் கொள்ளலாம். கம்பர்கூட, 'தேவ பாடை' என்றே காப்புச் செய்யுளில் கூறுகின்ருர்.

## சுந்தரஞர் சொன்னதென்ன?

எனக்கு முன் இங்கு பேசிய திரு. நல்லபெருமாள் பிள்ளை அவர்கள், 'மஞேன்மணீயம்' நாடகாசிரியரான திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு வடமொழியின் மீது காழ்ப்பு இருந்ததென்றும். அதனுற்ருன் தாம் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்திலே, 'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாதது' என்று கூறி, தமிழைப் பெருமைப் படுத்தியதாகவும் சொன்னுர்கள். அந்தக் கருத்தை நான் ஏற்பதற்கில்லை.

சமஸ்கிருதத்தைவிட தமிழ் தாழ்ந்தது என்று வடமொழிப் பண்டிதர்களிலே சிலர் கூறுகிருர்களே, அவர்களைக் கண்டிப்பதிலே சுந்தரஞர் ஆவேசம் காட்டுகிருர் என்பது உண்மைதான்.

பாரதத்தாயின் வலது கண்ணுக சமஸ்கிருதத்தையும் இடது கண்ணுகத் தமிழையும் கற்பனே செய்து சில வடமொழிப்புலவர்கள் பேசுவதைச் சுந்தரனுர் ஏற்க மறுத்தார்.

''கிழக்குத் திசையை நோக்கி ஒருவன் நிற்பானுகில், வலக்கண் தென் திசையிலும் இடக்கண் வட திசையிலுந்தானே இருக்கும்?'' என்று வினு எழுப்பி, தென்மொழியான தமிழை வலது கண்ணுகவும், வடமொழியான சமஸ்கிருதத்தை இடது கண்ணுகவும் வருணிக்கிறுர். இதிலிருந்து தெரிவது என்ன? பாரதத்தாய்க்குத் தமிழும் சமஸ்கிருதமும் இரு கண்போன்றவை என்ற உண்மையை 'மனேன்மணீயம்' ஆசிரியர் ஒப்புக்கொள்கிறுர் என்பதல்லவா! இதிலே வடமொழித் துவேஷம் எங்கே இருக்கிறது?

'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து' என்னும் சொற்ருெடருக்கு திருவனந்தபுரம் சுந்தரனுரின் 'மனேன்மணீயம்' நாடகநூல் பழைய பதிப்பு ஒன்றிலே கடைசிப்பக்கத்தில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ''உலக வழக்கு அழிந்தொழிந்து' என்பது, பேச்சு வழக்கற்று விட்டது என்னும் பொருளைத் தருவதாகும்'' என்கிறுர் சுந்தரனுர்.

இதைச் சொல்வதோடு நில்லாமல், ''அதனுலன்ருே தேவமொழி என்பது'' என்றும் விளக்கம் தருகிறுர். சமஸ்கிருதத்தைத் தேவமொழி என்று சொல்லுபவர், அதைத் துவேஷிப்பவராவாரா?

தமிழிலே, 'அழிந்து' என்னும் சொல்லுக்கு 'கழிந்து' என்றும் பொருள் உண்டு. 'ஒழிந்து' என்பது அமங்கலச் சொல் அல்ல. 'அது ஒழிய' என்று இலக்கியங்களிலே வரும். அதற்கு, 'அது நீங்கலாக' என்பதே பொருள். இப்படித்தான் சுந்தரனுரின் 'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து' என்பதற்கும் பொருள் காண வேண்டும்.

தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் 'வீழ்க' என்று இன்று நாம் அமங்கலப் பொருளில் கூறும் சொல்லைப் பயன் படுத்துகிறார். ''வீழ்க தண்புனல்'' என்று சொல்லி, மங்கலமாக மாற்றுகிறார். 'விண்ணிலிருந்து நீர் வீழட்டும்' என்கிறார் இது போல, சுந்தரனார் அழிந்தொழிந்து என்று சமஸ்கிருதத்தைப் பற்றிச் சொன்னது அமங்கலச் சொல் அல்ல.

## பண்டிதர்களின் தொடர்பு மொழி

ஆதி சங்கரர், மாத்வர், இராமானுஜர் ஆகிய தென்னாட்டு மகான்கள் வடபுலம் சென்று அங்குள்ள சமயத் தலைவர்களோடு வாதம் செய்து வெற்றி பெற்றார்கள் என்று அவர்களுடைய வரலாறு கூறுகின்றது. அவர்கள் அங்கு சமஸ்கிருதத்தில் பேசித் தானே வாதாடியிருக்க முடியும் என்று நம்பி, அதைக் கொண்டே சமஸ்கிருதம் சங்கரர் காலத்திலே பேச்சு மொழியாக இருந்திருக்கிறது என்ற முடிவுக்கு சிலர் வருகின்றனர். இதனையும் என்னால் ஏற்க முடியவில்லை.

சங்கரரோ இராமானுஜரோ வடபுலத்திலே சமயப் பண்டிதர் களுடன் சமஸ்கிருதத்தில்தான் வாதாடினார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். வேறு பொதுமொழி எதுவும் அவர்கள் காலத்தில் வழங்கவில்லை. அதனாலேயே சாதாரண மக்களும் அக்காலத்தில் சமஸ்கிருதத்தில் பேசினார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடுவதற்கில்லை.

ஆதிசங்கரர் வடபுலத்திலே வாதாடியது சமஸ்கிருதப் பண்டிதர்களோடுதான். சமஸ்கிருதம் பண்டிதர்களின் பாஷை யானதால் அதனைப் பொது மொழியாகக் கொண்டு வடபுலத்துப் பண்டிதர்களுடன் தென்புலத்துப் பண்டிதர்கள் வாதாடினர் பண்டைக் காலத்திலே! இதற்கு, இந்நாளில் ஆங்கிலம் படித்த பட்டதாரிகளையே சான்றாகக் கொள்ளலாம்.

நம்மில் சாமான்யர்களால் ஆங்கில மொழியில் பேச முடிவதில்லை. இந்த நாட்டிலே எந்த ஒரு மாநிலத்திலும் படிக்காதவர்களும் பேசும் மொழியாக ஆங்கிலம் இயங்கவில்லை, அது, பட்டதாரிகள் மொழியாகத்தான் இருந்து வருகிறது பட்டதாரிகள் தங்களுக்குள்ளே ஆங்கிலத்தில் பேசிக் கொள்ளுகிறார்கள். அதனாலேயே நம்முடைய பிற்கால சந்ததியார் இந்தியாவில் ஆங்கிலம் சாமான்யரும் பேசுகின்ற மொழியாக இருந்தது என்று நம்பிவிட முடியுமா?

சமஸ்கிருதம் பண்டிதர்களுக்காகவே படைக்கப்பட்ட மொழி. அதனால், ஆதிசங்கரர் காலத்திலும் சரி: பிற்காலத்திலும் சரி: அந்த மொழியிலே பாண்டித்தியம் பெற்றவர்கள் தங்களுக்குள் அதிலே பேசிக்கொள்ள முடிந்திருக்கிறது.

இலண்டன் தெரு ஒன்றிலே இந்தியப் பட்டதாரிகள் இருவர் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு சென்றால் அங்குள்ள பட்டதாரியல்லாத சாமான்ய ஆங்கிலேயன் அவர்கள் பேச்சைப் புரிந்து கொள்ளமாட்டான். காரணம், நம்முடைய இந்தியர்கள் பேசுவது இலண்டன் தெருவிலே பேசப்படுகின்ற பேச்சு மொழி ஆங்கிலம் அல்ல. ஆனால், நம்மிலே ஆங்கிலம் படித்தவர்கள் பேச்சு மொழி ஆங்கிலத்தில்தான் தங்களுக்குள் பேசிக்கொள்வதாக நினைக்கிறார்கள். அது ஒரு மயக்கம்-மாயை!

தமிழ்நாட்டிலே தமிழைப் படிக்காதவர்களும் அந்த மொழியிலே தங்களுக்குள் பேசிக்கொள்ள முடியும். ஆனால், இருநூறு ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஆங்கிலம் இந்த நாட்டில் எங்கும் எதிலும் பயன்படுத்தப்பட்டு வந்தும், பட்டப்படிப்புக்குக் கீழ் நிலையில் படித்தவர்கள் அந்த மொழியில் பிழையின்றிச் சரளமாகப் பேச முடியவில்லை.

## சமமான மொழிகள்

என்னுடைய கருத்து இதுதான்: சமஸ்கிருதம் இந்து சமயத்தவரின் பொது மொழியாகும். இன்னும் சொன்னால்,

கலாசாரப் பொது மொழியாதும். சமய தத்துவக் கலைநூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள கலைமொழியாகும். அது, சாமான்ய இந்துக்களின் பேச்சு மொழியாக இல்லாததனுல் அதன் பெருமை குறைந்துவிடாது குறைந்து விடுவதாக நினைத்துக் கொண்டுதான் சமஸ்கிருதப் புலவர்களிலே சிலர் மிகுந்த சிரமப் பட்டு அதிலே பேசிக் காட்ட முயல்கிருர்கள்.

சமஸ்கிருத மொழியில் புலமையுடையவர்களிலே சிலர்-புலமை இல்லாமலேயேகூட, அம்மொழியிடத்துப் பற்று கொண்ட வர்களாக வெளிக்குக் காட்டிக் கொள்பவர்கள்—சமஸ்கிருதம் ஒன்றுதான் தெய்வமொழி என்றும், தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகள் எல்லாம் மானுட மொழிகள் என்றும் கூறி, தமிழ்ப் புலவர்களுக்கு-புலமையில்லா விட்டாலும் தமிழைத் தாய்மொழி யாகக் கொண்டவர்களுக்கு—வருத்தத்தை ஏற்படுத்துகின்றனர். மனதைப் புண்படுத்துகின்றனர் என்றும் சொல்லலாம். இது தேவையற்ற வாதம்.

சமுதாய வளர்ச்சி விதியின்படி எல்லா மொழிகளுமே மக்களிடமிருந்துதான் பிறக்கின்றன; மக்களால்தான் வளர்க்கப் படுகின்றன. தெய்வம் படைத்த மொழி என்பதாக ஒரு மொழியை மட்டும் சொல்வதற்கில்லை இந்தப் பிரபஞ்சமே தேவனுடைய படைப்புத்தான். இந்த நம்பிக்கையின்படி. மொழிகள் அனைத்துமே இறைவனுல் படைக்கப்பட்டவை என்று கொள்வது முறையாக இருக்கும். ஆயினும், சமஸ்கிருதம் உள்ளத்துள்ளே மறைந்து கிடக்கும் இறையை உணர்த்துவதற் காக, உணர்ந்தபின் அதனேடு ஒன்று கலப்பதற்காகக் கடைப் பிடிக்கப்படும் தவத்திற்கான மந்திரங்களைக் கொண்ட மொழி யாதலால், அதனைத் தேவமொழி என்று சொல்வது வழக்கமாகி விட்டது, இதை தெய்வ பக்தியும் மதப் பற்றும் உடைய இந்துக்கள் மறுத்து வாதிடத் தேவையில்லை.

இஸ்லாமியருக்கு வேதத்தைத் தந்த அரபு மொழியிடம் பற்று இருப்பதுபோல, கிறித்துவர் தமது வேத நூலான பைபிளைத் தந்தது என்ற காரணத்திற்காக லத்தீன் மொழியிடம் பற்றுக் கொண்டிருப்பது போல, இந்துவும்-அவர் எந்த மொழியினராயினும்-வேதத்தைத் தந்தது சமஸ்கிருதம் என்பதால், அதனிடத்துப் பற்று வைப்பது அவசியமாகிறது. மத நம்பிக்கையற்றவர்களை விட்டுவிடுவோம்.

சமஸ்கிருதத்தைத் தேவமொழியாக ஏற்கும்போது நம் தாய் மொழியான தமிழை வெறும் மானுட மொழிதான் என்று வாதிடுபவரை மறப்பதோ, மன்னிப்பதோ சாத்தியமில்லை.

எல்லா வகையிலும் சமஸ்கிருதத்திற்கு நிகரானது தமிழ் மொழி என்பது இந்து வேதங்களில் பூரண ஞானமுடைய அப்பழுக்கற்ற அந்தணர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். சமஸ்கிருதம் மெய்ஞ்ஞான ரகசியங்களைக் கூறும் மந்திர மொழி என்றால், தமிழும் இறையருளில் இரண்டறக் கலக்க வைக்கும் பக்தியைத் தரக்கூடிய மொழியாகும். அதனால்தான், சமஸ்கிருதம் போலவே தமிழும் தெய்வ மொழி என்று நம் முன்னோர்கள் கூறினர். சமஸ்கிருதத்தைத் தேவ பாடை என்று சொன்ன கம்பரே, தாம் படைத்த 'இராமாவதாரம்' என்னும் மாகாப்பியத்திலே-அகத்தியப் படலத்துள்,

'நிழல்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண்
தழல்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ்''......

என்று கூறி, தமிழ் மொழியும் தேவ மொழியே என்பதை உணர்த்துகிறார்.

## பாரதியார் கருத்து

வடமொழியில் புலமையும் நால் வேதங்களில் பயிற்சியுமுடைய அப்பழுக்கற்ற அந்தணரும், தேசிய—சர்வதேசிய

வாதியுமான மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார், தமிழைச் சொல்லுமிடத்து, 'உயர் ஆரியத்திற்கு நிகர்' என்கிறார். 'தமிழ்த் தாய்' என்னும் பாடலிலே, 'என்னை ஆதிசிவன் பெற்றுவிட்டான்' என்று தமிழ்த்தாயே கூறுவதாகப் பாடுகின்றார்.

'தமிழ்' என்னும் சொல்லை ஆராய்ந்து எழுதிய கட்டுரை ஒன்றிலே 'எளிதில் சிவானுபூதியைத் தரவல்லது தமிழ்' என்கிறார் வடலூர் இராமலிங்க சுவாமிகள்

ஞான மார்க்கத்தை விளக்குவதிலேயும் சமஸ்கிருதம் போலவே தமிழுக்கும் சம சக்தி உண்டு. இதனைத் திருமூலர் பெருமான் மூவாயிரம் பாடல்களில் இயற்றியுள்ள 'திருமந்திரம்' என்னும் நூலாலும், 'சிவஞான போதம்' உள்ளிட்ட 14 சைவ சாத்திரங்களாலும் அறிந்துகொள்ள முடிகிறது.

சமஸ்கிருதத்தில் பற்றுடையவர்களுக்கும் தமிழ் தாய் மொழியாக இருக்குமானால், அத்தகையவர்கள் தமிழைத் தாழ்த்தி சமஸ்கிருதத்தை உயர்த்த முயல்வது முறையோ, நெறியோ ஆகாது.

அதுபோல, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மதத்தால் இந்துக்களாக இருப்பார்களானால்—அவர்களுக்கு இந்து மதத்தில் பற்றும் இருந்துவிடுமானால், அத்தகையவர்கள் தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்தை வெறுப்பது முறையோ நெறியோ ஆகாது.

## தமிழ் தனி மொழி

இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி சமஸ்கிருதமே என்று சொல்லப்படுகிறது. தமிழிடத்துப் பற்றுடையவர்கள் இதனை மறுக்கத் தேவையில்லை. ஏனெனில், இந்திய மொழி களில் மிகப் பெரும்பாலான மொழிகள் சமஸ்கிருதத்தி லிருந்து

யொத்த மொழிகளாகவோ, சமஸ்கிருதத்திற்குரிய தேவநாகரி லிபியைப் பெற்றவையாகவோ. இலக்கணத்திலும் சமஸ்கிருதத்தை ஒட்டியவையாகவோ இருக்கக் காணகிறோம்.

ஆனல், இதற்கு முற்றிலும் விலக்கானது தமிழ்மொழி. இது, நடுநிலை உள்ளம் படைத்த சமஸ்கிருதப் புலவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கால்டுவெல் போன்ற சமஸ்கிருத ஞானம் உடைய ஐரோப்பியப் பாதிரிமார்களாலும் தமிழ் தன்னேரில்லாத் தனிமொழி என்பது ஏற்கப்பட்டிருக்கிறது. ஆயினும், தமிழிலே வடமொழிச் சொற்கள் அங்குமிங்குமாக கலந்திருக்கும் சங்ககால *நூற்*களைச் சான்று காட்டி, வடமொழியின் துணையின்றித் தமிழ் மொழிக்கு வளர்ச்சியில்லை' என்று வாதிப்போரும் உண்டு.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தமிழிலுள்ள சமய *நூல்*களிலோ, பக்தி வழிப்பட்ட *நூல்*களிலோ சமஸ்கிருதச் சொற்கள் கொஞ்சம் கூடுதலாகக் கலந்திருக்கலாம் அதனுல், சமஸ்கிருதம் இல்லாமல் தமிழ் இல்லை என்று சொல்வதற்கில்லை. இந்து மதத்தினரிடையில்—குறிப்பாக, இந்து சமயத்தில் பற்றுடைய ஞானிகள், பக்தர்கள் ஆகியோரிடையில் கருத்தொருமைப்பாடு காண்பதற்காக சமய ரீதியிலான கலைச் சொற்கள் பலவற்றைத் திருமூலர், அருணகிரிநாதர், மணிவாசகர், தாயுமானவர், வள்ளலார் போன்ற சமய *நூ*லாசிரியர்கள் சமஸ்கிருதச் சொற்களைக் கொஞ்சம் மிகுதியாகவும் எடுத்தாண்டிருக்கிறார்கள். அதனை, தமிழ் வளர்ச்சிக்காக என்பதை விட சமய வளர்ச்சிக்காக என்று சொல்வதே பொருத்தமுடையதாக இருக்கும்.

இஸ்லாமியத் தமிழர்கள் மந்திரச் சொற்களாகவும் சமயத் தலைவர்களோடு தொடர்புடைய பெயர்ச் சொற்களாகவும் அரபு மொழிச் சொற்களைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் கூடக் கையாண்டு வருவதைக் காண்கிறோம். அவற்றைக் கைவிடுமாறு

தனித் தமிழ்ப் பற்றுடையவர்கள் இஸ்லாமியரைக் கேட்க முடியுமா? அப்படிக் கேட்பது அவர்கள் மதத்தில் தலையிடுவதாகும்

தமிழிலுள்ள சில நூல்களில் வடமொழிச் சொற்கள் கொஞ்சம் தேவைக்கு அதிகமாகவே கலந்திருக்குமானால், அது தமிழ்மொழியின் குறைபாடு அன்று. அந்நூல்களை எழுதிய தமிழருடைய குறைபாடாகத்தான் கொள்ள வேண்டும்.

தமிழோடு வடமொழியிலும் புலமை பெற்றுள்ளவர்கள் தங்களை அறியாமலே 'மணிப்பிரவாள மொழி'யில் எழுதி விடுகின்றனர். அவர்களிலேகூட, மறைமலை அடிகள் போன்றவர்கள் தமிழின் தனித்தன்மையைக் காப்பதைத் தங்கள் கடமையாகக் கொண்டிருந்ததை நாம் அறிவோம்.

தமிழைப் போன்ற பேச்சு வழக்கிலுள்ள ஒரு மொழியிலே பிறமொழிச் சொற்கள் கலந்து விடுவது இயற்கையாகும். சமஸ்கிருதம் பேச்சு வழக்கிலில்லாததால் அதிலே தமிழ்ச் சொற்கள் கலக்க வாய்ப்பிருக்கவில்லை. அப்படியிருந்தும், பல தமிழ்ச்சொற்கள் சமஸ்கிருதத்தில் கலந்திருக்கின்றனவென்று இருமொழிப் பண்டிதர்களில் நடுநிலையாளர் சிலர் கூறி வருகின்றனர். மற்றும், தமிழகத்தை ஆள்வோர் வேற்று மொழியினராக இருந்தபோது அவர்களுடைய மொழிச் சொற்களும் ஆளப்படுவோரான தமிழருடைய பேச்சு மொழியிலே கலந்துவிட்டது வரலாறு வகுத்த விதியாகி விட்டது.

தமிழகத்தை நவாபுகள் ஆண்டபோது அரபு அல்லது உருது மொழிச் சொற்கள் மக்களுடைய பேச்சிலே கலந்துவிட்டன. பஜார், கிஸ்தி, ரஜா போன்றவற்றைச் சான்றாகச் சொல்லலாம்.

அப்படியே வடமொழிப் பற்றும் அதிலே பெரும் புலமையும் உடைய தெலுங்கரான நாயக்க மன்னர்கள் தமிழகத்தை ஆண்ட

காலத்திலே வடமொழிச் சொற்களும் தெலுங்கு மொழிச் சொற்களும் தமிழருடைய பேச்சு மொழியிலே கலந்தது உண்டு.

கி. பி மூன்றும் நூற்றுண்டு தொடங்கி இன்றைய இருபதாம நூற்றுண்டின முற்பாதி வரை அடுததடுத்துக் களப்பிரர், பல்லவர், நாயக்கர், நவாபுகள், மகாராஷ்டிரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய வேற்று மொழியினர் பல நூற்றுண்டுக் காலம் தமிழகத்தில் அரசோச்சினர்.

## சோழர் காலத்து நிலை

பிற்காலச் சோழர்காலம் என்று சொல்லப்படும் கி பி 9ஆம் நூற்றுண்டு தொடங்கி 13ஆம் நூற்றுண்டு முடிய சுமார் 400 ஆண்டுக் காலத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வாகள் ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலத்திலே தமிழில் இலக்கிய நூற்கள் மலிந்தன. ஆனுல், களப்பிரர் காலம் தொடங்கித் தமிழக அரசியலிலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி சமண, பௌத்த, இஸ்லாமிய, சைவ-வைணவ சமயங்கள் கலந்து விட்டமையால், சமயச் சார்பற்ற அரசு முறை சிலப்பதிகாரக் காலத் தோடு முற்றுப்பெற்று விட்டது. சமஸ்கிருதம், தெலுங்கு, அரபு, ஆங்கிலச் சொற்கள் அரசியலாரின் செல்வாக்கால் தமிழில் கலந்துவிட்டன. பிற்காலச் சோழர் காலததிலேகூடத் தமிழிலே சமஸ்கிருதச் சொற்கள்மிகுதியாகக் கலப்பது தவிர்க்கப்படவில்லை. அக்காலத்தில் சமய வழிப்பட்ட நூற்களே தமிழ்ப் புலவர்களால் படைக்கப்பட்டன. பொதுவாக, தமிழர் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலோர் நன்றுக எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்ளுகின்ற வரையில் தமிழின் தனித்தன்மையைக் காப்பது அரிதுதான். எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களுக்கும் மொழியறிவு குறைவாக இருக்கின்ற காரணத்தால், தமிழிலே நிறைபுலமை பெற்றவர்களும் சாதாரண மக்களுக்காக எழுதும்போதும் பேசும்போதும் சமஸ்கிருத-ஆங்கிலச் சொற்களைக் கலக்க வேண்டியிருக்கிறது. இதனுல், 'பழகு தமிழ்' என்பதாக ஒரு புதுத்தமிழே தோன்றிவிட்டது.

# சமஸ்கிருதக் கல்வி

என்னைப் பொறுத்தவரையிலே தாய்மொழியை நேசிப்பதை நான் வரவேற்கிறேன். அப்படி நேசிப்பவர்களை நான் போற்றுகிறேன். ஆனால், பிற மொழியிடத்துப் பகைமை பாராட்டுவதை நான் விரும்பவில்லை. அதற்கு அவசியமிருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை, ஒருவருக்கு ஏதேனும் ஒரு மதத்தில் உண்மையான பற்று இருக்குமானால், குமரி முதல் காஷ்மீரம் வரை பரந்து கிடக்கும் பாரத பூமியிடத்தும் பக்தி இருக்குமானால் அவரிடம் பிறமொழித் துவேஷம் பிறப்பதற்கில்லை

## சமயமும மொழியும்

இஸ்லாமியத் தமிழர் தம் தாய்மொழிக்குரிய நிலத்தின் எல்லையைக் கடந்து உலகெங்குமுள்ள இஸ்லாமியரை நேசிக்கின்றனர். அதனால், இஸ்லாமிய மதத்தவரைப் பிணைக்கின்ற ஒருமைப்பாட்டு மொழியான அரபு மொழியையும் அவர் மனமார நேசிக்கிறார். அம்மொழியிலே எழுதப்படிக்கத் தெரியாதவரும் அது தனது வேத மொழி என்பதற்காகக் கண்ணை மூடிக் கொண்டு அதனிடத்துப் பக்தி செலுத்துகிறார்.

அதுபோல, கிறித்துவ மதத்தவர் லத்தீன் மொழியைப் பயின்றில்லையாயினும், அது வேதமொழி என்பதற்காகப் பக்தி செலுத்துகின்றனர்.

இந்த உணர்வு இந்துக்களாகவுள்ள தமிழர்களுக்கும் இருக்குமானால், சமஸ்கிருதத்தையோ, இந்திய மொழிகளில் தமிழல்லாத பிற மொழிகளையோ அவர்கள் துவேஷிப்பதற்கில்லை.

## விருப்பப பாடம்

சமஸ்கிருத மொழியைக் கற்பதிலேயும் தமிழரிடையே—குறிப்பாக, கல்விமான்களிடையே நீண்ட காலமாகக் கருத்து வேற்றுமை நிலவி வருவதைக் காணலாம்.

சமஸ்கிருதத்தை இந்துவாக உள்ள எல்லோருமே பாட மொழிகளில் ஒன்றாக எடுத்துப் படிக்கவேண்டு மென்று சிலர் கருதுகின்றனர். இதற்கு மாறாக, சமஸ்கிருதத்திற்கு பாடத் திட்டத்தில் இடமே தரக்கூடாதென்று கட்சி கட்டிக்கொண்டு வாதாடுவோரும் இருக்கின்றனர். இந்த இரு தரப்பினருமே தடம்புரண்டவர்க ளாவார்கள்.

சமஸ்கிருதம் போன்ற பேச்சு வழக்கிலில்லாத மொழியை எல்லோருமே பாட மொழிகளில் ஒன்றாக எடுத்துப் பயில்வது தேவையற்றதாகும். அது சாத்தியமும் இல்லை. புரோகிதர்கள், கோயில்களில் பணிபுரியும் குருக்கள், சமஸ்கிருத போதனைக்குத் தேவைப்படும் ஆசிரியர் பணிக்குச் செலல விரும்புவோர் மட்டும் பயின்றாலே போதும். அதற்கு பாடத் திட்டத்தில் ஏதேனும் ஒரு கட்டத்தில் விருப்பப் பாடமாக வைத்தால் போதும், இதற்கு அதிகமாக, சமஸ்கிருத இலக்கியங்களைப் படித்துப் பயன் பெற விரும்புவோரும், சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்குமிடையே இலக்கியப் பரிவர்த்தனை செய்வதில் ஈடுபட ஆர்வமுடையோரும் சமஸ்கிருத மொழியை விருப்பப் பாடமாக எடுத்துப்பயிலலாம். எந்த நிலையிலும் தமிழர் எல்லோருக்கும் சமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாக வைக்கத் தேவையில்லை என்பது என் கருத்து.

ஆங்கில மொழிகூட விருப்பப் பாடமாக இருக்க வேண்டு மென்பதே என் கருத்து. ஆனால், காலத்தின் கட்டாயத்தால் ஆங்கில மொழி நம்முடைய வாழ்க்கை மொழியாக்கப்பட்டு விட்டது. இன்னமும் ஆட்சிமொழியாகவும் நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாகவும் நீடித்து வருகிறது. இந்த கொடுமையி லிருந்து விடுபடும் தேதிகூட நமக்குத் தெரியவில்லை. அதனால், அந்தக் காலம் வரும்வரை ஆங்கிலம் நமது பாடத்திட்டத்தில் கட்டாயப் பாடமாக இருந்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது.

ஆங்கிலம் பள்ளிகளில் விருப்பப் பாடமாக்கப்படும் நாளிலே சமஸ்கிருதம் போன்ற தமிழல்லாத பிற மொழிக்கு பாடத் திட்டத்தில் இடந்தருவது சாத்தியமாகும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் நமது தாய்மொழியான தமிழைக் கைவிட்டு, அதற்கு மாற்று மொழியாக இன்னொரு மொழியைப் பயில உரிமை வேண்டுமென்று யாரேனும் சொன்னால், அதனை நான் ஏற்க மாட்டேன்.

## பிராமண மொழியா?

சமஸ்கிருதமானது பிராமண வருணத்தினருக்கே உரிய மொழி என்று சிலரால் கருதப்படுகிறது. பிராமணர்களிலேயும் சிலர் இந்தத் தவறான எண்ணத்திற்குப் பலியாகியிருக்கின்றனர். இது சரியல்ல. 'பிராமணரல்லாதார்' எனப்படுவோர் சமஸ்கிருதத்தைப் படிப்பதற்கு முன்னொரு காலத்தில் தடை இருந்ததாகக்கூட ஒரு சிலர் சொல்லி வருகின்றனர். இதைப் பற்றிய உண்மையைக் காணும் ஆராய்ச்சியிலே நான் இதுவரை ஈடுபட்டதில்லை; இனியும் ஈடுபடப் போவதில்லை

சமஸ்கிருதம் இந்துக்களுக்கே உரிய மொழி என்றும் சொல்வதற்கில்லை. உலக இலக்கிய மொழிகளில் ஒன்றாக இருக்கும் தகுதி அதற்கு இருக்கிறது. இந்துக்களின் வேதங்கள் சமஸ்கிருதத்திலே இருப்பதாலும், இன்னும் ஆகமங்களும் சாத்திரங்களும் கூட அந்த மொழியின் மூலமே முதலில் கிடைப்பதாலும் இந்துக்களின் மதமொழியாகவும் சமஸ்கிருதம் இருந்து வருகிறது. ஆயினும், பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருகைதந்த கிறித்துவப் பாதிரிமார்களில் சிலர் சமஸ்கிருதத்திலே நிறைபுலமை பெற்றதும் உண்டு.

மாக்ஸ்முல்லர் என்பவர் சமஸ்கிருதத்திலுள்ள வேதங்களை பழுதறப் பயின்று அவற்றிற்கு வியாக்யானங்களும் எழுதியிருக்கிறார். சமஸ்கிருதத்தில் பயிற்சியில்லாத பிராமணர்களும் தங்கள் மதத்தின் வேதங்களை மாக்ஸ்முல்லர் ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்ததன் மூலம்தான் பயில்கின்றனர். இந்த அளவுக்கு சமஸ்கிருதம் உலக மொழியாகி விட்டது.

சமஸ்கிருத மொழிப் பண்டிதர்கள் காட்டிய உயர்வு மனப் பான்மை காரணமாகவும் தமிழரிலே சிலருக்கு அந்த மொழியின் மீது வெறுப்பு ஏற்பட்டிருக்க நியாயமுண்டு. இனி, அது தேவையற்றதாகும்.

கடந்த காலத்திலே ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்களிடை யிலும் உயர்வு மனப்பான்மை வெளிப்படக் கண்டிருக்கிறோம். ஒருவர் தமிழில் எவ்வளவு புலமை பெற்றிருந்தாலும், ஆங்கி லத்தில் புலமை பெறவில்லையென்ற ஒரே காரணத்திற்காக அவர் அறிவாளியாக மதிக்கப்படுவதில்லை. இக் கொடுமை இன்னும் இருக்கத்தான் செய்கிறது. ஆங்கிலம் படித்தவர்களிடம் காணப்படும் இந்த உயர்வு மனப்பான்மைக்காக நாம் ஆங்கி லத்தை வெறுக்கிறோமா? இல்லையே!

ஆங்கிலேயர்கள் 200 ஆண்டுக் காலம் நம்மீது ஆதிக்கம் பெற்றிருந்தனர். அவர்கள் ஆட்சியிலே நம்மவர் அடைந்த இன்னல்கள் கொஞ்சமல்ல. அப்படி யிருந்தும், ஆங்கிலேயர் இந்த நாட்டைவிட்டு வெளியேறியபோது அவர்களோடு சேர்த்து ஆங்கிலத்தையும் வெளியேற்றி விட்டோமா? இல்லையே!

## தேசிய ஒருமைப்பாடு

இன்றைய சூழ்நிலையிலே தமிழ்நாட்டு இந்துக்கள் மத விஷயத்தில் மறுமலர்ச்சி அடைய வேண்டியிருக்கிறது. இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும் அது தேவைப்படுகிறது, அது தவறல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் கருதியும் நான் சமஸ்கிருதத்தை வெறுக்க மறுக்கிறேன். அதுபோல, உலக ரீதியி லான ஒருமைப்பாட்டைக்கருதி, தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தங்கள் மதவழிப்பட்ட அரபு மொழியினிடத்தும், கிறித்துவத் தமிழர்கள் தங்கள் மதவழிப்பட்டலத்தீன் மொழியினிடத்தும் பற்றுக் கொண் டிருப்பதை நான் மதிக்கிறேன். இந்திய தேசிய ஒருமைப்

யாட்டுக்கோ, உலக ஒருமைப்பாட்டுக்கோ ஆதரவு அளிக்க விரும்பாதவர்களின் நிலை வேறு.

இந்து மதத்தினரிடையே கடந்த காலத்தில் சில தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன. நம்முடைய வேதங்கள் மக்களிடையே பேச்சு வழக்கிலுள்ள மொழிகளிலே வருவதற்கு வழி செய்யப்படவில்லை. அரபு மொழியில் தோன்றிய இஸ்லாமியரின் வேத நூலான குர்ஆன் தமிழ் உள்ளிட்ட உலக மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கிறித்துவரின் மத நூலான பைபிளும் கிறித்துவரிலே கடைசி மகன் கையிலும் இருக்க முடிகிறது.

இந்து வேத நூல்கள் அத்தகைய நிலையில் இல்லை. அவை இன்னமும் பண்டிதரின் சொத்தாகவே இருந்து வருகிறது சங்கர மடமோ, ஜீயர் மடமோ, சைவ மடங்களோ நான்கு வேதங்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட இதுவரை முன்வந்ததாகத் தெரியவில்லை. ஆகம-சாத்திர நூல்களின் நிலையும் இதுதான்.

''இந்த விஞ்ஞான யுகத்திலே வேதாகம சாத்திர நூல்கள் எத்தனை பேருக்குத் தேவை?'' என்று கேட்போரும் உண்டு. எத்தனை பேருக்குத் தேவைப்படுகிறது என்பது பிரச்சினையல்ல. தமிழின் மூலம் குர்ஆனைப் படிக்க இஸ்லாமியத் தமிழருக்கும் பைபிளைப் படிக்க கிறித்துவத் தமிழருக்கும் வாய்ப்பு இருப்பது போல, இந்துவாகவுள்ள தமிழருக்கும் தம்முடைய வேத நூல்களைத் தமிழின் மூலம் பயில வாய்ப்பிருக்கவேண்டும். ஒரு தமிழருக்கு மட்டுமே தேவைப்படுவதானாலும் அவை தமிழில் வெளிவந்தாக வேண்டும். ''தமிழில் பழமறைகள் பாடுவோம்'' என்பது பாரதியாரின் வாக்கு.

# சமஸ்கிருதம் தமிழின் தாய் மொழியா?

இந்திய மொழிகளிலே இந்துக்களின் கலாசாரப் பொது மொழியாக விளங்கும் சமஸ்கிருதமும், தமிழினத்தவரின் வாழ்க்கை மொழியாகவும் தன்னேரில்லா இலக்கிய மொழியாகவும் விளங்கும் தமிழும் மிகவும் புராதனமானவை. இந்த உண்மையை உணர்ந்தே தோன்றிய காலமறியாத மொழிகள் என்னும் பொருளிலே தெய்வந் தந்தவையாகக் கருதப் படுகின்றன.

இன்னொரு பெருஞ் சிறப்பும் இந்த இரு மொழிகளுக்கும் உண்டு. தன்னிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற தென்மொழிகளைத் தோற்றுவித்த பெருமை தமிழுக்கு உண்டு என்பது மொழி ஆய்வாளர் கண்டுள்ள முடிவு. இன்னொன்றையும் இங்கு சொல்வது அவசியமாகிறது. சமஸ்கிருத மொழியின் கலப்பு காரணமாகத்தான் தமிழிலிருந்து இவ் மொழிகள் தோன்றின என்ற உண்மையையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த உண்மையை அயல் நாட்டவரான கால்டுவெல் போன்றவர்கள் தக்க சான்றுகளுடன் வலியுறுத்தியுள்ளனர். இதன்படிப் பார்த்தால், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய தென் மொழிகளின் தாய் மொழி என்ற பெருமைக்குத் தமிழ்மொழி உரியதாகிறது.

## சுந்தரனார் கருத்து

''மனோன்மணீயம்'' என்னும் நாடக இலக்கியத்தைத் தந்த திருவனந்தபுரம் பேராசிரியர் சுந்தரனார், தமிழ் மொழிக்கு வாழ்த்துக் கூறுமிடத்து, 'கன்னடமும் தெலுங்கும் மலையாளமும்

துளுவும் உன் உதிரத்து உதித்தெழுந்தன" என்கின்றார். ஆம்; திராவிட மொழிகளின் தாய்மொழி தமிழே என்கிறார். கால்டுவெல் போன்ற மொழி ஆராய்ச்சியாளர்கள் சொன்னதையே சுந்தரனாரும் கூறுகின்றார்.

இந்தப் பேராசிரியர், இன்று கேரளத்தின் தலைநகராக விளங்கும் திருவனந்தபுரத்தில் பிறந்து வளர்ந்து அங்கேயே வாழ்ந்தவர் என்பதையும், திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் தான் பேராசிரியர் பதவி வகித்தார் என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

வியப்பென்னவென்றால், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் புலவர் பெருமக்கள் சமஸ்கிருதமே தங்கள் மொழிகளின் தாய்மொழி என்று சொல்வதிலே பெருமை கொள்கிறார்கள் என்பதாகும். இதற்கு மாறாக, தமிழ்தான் தாய் மொழி என்ற நடுவுநிலையான ஆராய்ச்சியாளர் கண்ட முடிவை ஒப்புக் கொள்வோர் அவர்களிலே மிகவும் குறைந்தேகாணப் படுகின்றனர்.

## தமிழ், தென்மொழிகளின் சகோதரியா?

1981ல் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிலே கம்யூனிஸ்டான கேரள முதல்வரும் இ காங்கிரஸ் காரரான கர்நாடக முதல்வரும் கலந்து கொண்டு பேசினர். ஆந்திர முதல்வர் அழைக்கப்பட்டிருந்தாரென்றாலும், வர இயலாததால், தமக்குப் பதிலாக தம் சகாவான கல்வி அமைச்சரிடம் தம் சொற்பொழிவை அவர் கொடுத்தனுப்பி யிருந்தார்.

ஆந்திர-கர்நாடக-கேரள முதல்வர்கள் மூவருமே கூடிப்பேசி முடிவெடுத்துச் சொல்பவர்கள்போல, தமிழை தங்கள் பிரதேசங் களுடைய மொழிகளின் 'சகோதரி மொழி' என்று குறிப் பிட்டனர் ஆம்; தெலுங்கு-கன்னட-மலையாள மொழிகளுக்குத்

தமிழே தாய்மொழி என்ற கருத்தை மறைமுகமாக அவர்கள் ஒருமனப்பட்டு மறுத்தனர் என்றே சொல்ல வேண்டும்.

இந்த முதல்வர்கள் மூவரும் தத்தம் தாய்மொழியில் பெரும் புலமையுடையவர்களோ இல்லையோ; ஆனால், அம்மொழிகளின் பேராசிரியர்களில் பெரும்பாலோர் கொண்டுள்ள கருத்தையே அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டில் வெளிப்படுத்தினர் என்று சொல்ல வேண்டும். தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் தமிழின் சகோதரி மொழிகளானால், சமஸ்கிருதமே தமிழுக்கும் தாய்மொழியாகிறது. இவர்கள் கருத்தை உலகத் தமிழ்மாநாட்டில் தமிழ்ப் புலவர்களில் எவரும் மறுத்துப்பேசவில்லை.

## தமிழரின் தவறு

ஆரிய மொழிக் குடும்பத்தின் தலைமொழி சமஸ்கிருதமே என்பதை மறுக்கும் மொழி வல்லுநர்கள் வடபுலத்தில் இல்லை. திராவிட மொழிகள் அல்லாத இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலிருந்து கிளைத்தவையே என்ற கருத்து வங்காளி மராத்தி, குஜராத்தி, இந்தி போன்ற பல கோடி மக்களால் பேசப்படும் மொழிகளின் பேராசிரியர்களால் விவாதத்திற்கிடமின்றி ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவாகி விட்டது.

சமஸ்கிருதம் பேச்சு வழக்கில் இல்லையென்றாலும் அதன் இடத்தை இந்தி மொழி பிடித்துக்கொண்டு விட்டது. சமஸ்கிருத எழுத்து வடிவத்தையும் இந்தி மொழி ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததாகும். சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவை என்று நம்பப்படும் கிளை மொழிகள் வழங்கும்- அனேகமாக, விந்திய மலைக்கு வடக்கேயுள்ள—பிரதேசம் முழுவதற்கும் சாமான்யர்களிடையிலும் இந்தியே இணைப்பு மொழியாக இருந்து வருவதைப் பார்க்கிறோம். இதற்கு அங்கு எதிர்ப்பே இல்லை. வங்காளியருக்கு தமிழரைப் போன்று ஆங்கில மோகம் உண்டென்றாலும், வங்காளம் முழுவதிலும் இந்தி மொழியே இணைப்பு மொழியாக நடைமுறையில் இருந்து வருகிறது.

வங்காளத்தில் வாழும் தமிழரும் இந்திமொழியின் மூலமே வங்காளியரோடு தொடர்பு கொள்கின்றனர்.

## திராவிட இயக்கம் செய்யாததேன் ?

அதுபோல, தென்னகத்தின் இணைப்பு மொழியாக தமிழ் மொழி இருக்கவில்லை. அந்த வாழ்வை தமிழுக்குத் தேடு வதற்கு முன் எந்தக் காலத்திலும் தமிழரிலே எவரும் முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. தென்னகம் முழுவதையும் ஒரே நாடாகவும், அதில் வாழ்வோர் அனைவரையும் ஒரே இனத்தவ ராகவும் கற்பனை செய்து கொண்டு திராவிடத் தனிநாடு கோரி சுமார் அரை நூற்றாண்டுக் காலம் தமிழகத்திலே ஓர் இயக்கம் இருந்து வந்தது. அவ்வளவு நீண்ட காலம் அந்த இயக்கம் தமிழகத்தில் நிலைத்திருந்த தென்றாலும், அதன் மிச்சசொச்சங் கள் இன்னமும் பல்வேறு முகாம்களாக இருந்து வருகின்றன என்றாலும், அவற்றைச் சார்ந்தவர்கள்கூடத், தமிழை தென்ன கத்தின் பொதுமொழியாகச் செய்ய பிரசாரத்தின் மூலம் முயற்சி எடுக்கவில்லை

## இருமொழிப் புலவர்களைப் போற்றுவோம் !

இது எப்படியாயினுஞ் சரி; தமிழும் சமஸ்கிருதமும் மிகவும் பழமையான மொழிகள் என்பதனை மறுப்பாரில்லை. சமஸ்கிருத-தமிழ் மொழிகளின் அறிஞர்களிடையே தங்கள் தங்கள் மொழிகளே சிறந்தவை என்ற வாதம் எழுவதற்கும் காரணமாக இருப்பது அம்மொழிகள் தன்னேரில்லாத் தனி மொழிகள் என்பதேயாகும்.

அதிர்ஷ்டவசமாக, தமிழ்-சமஸ்கிருதம் ஆகிய இரு மொழி களிலும் பெரும் புலமை பெற்ற அறிஞர்கள் தலை முறை தோறும் தமிழர் மத்தியில் தோன்றி வந்துள்ளனர். இந்தத் தலைமுறையிலேயும் அப்படிப்பட்ட இருமொழிப் புலவர்கள் நம்மிடையே இருந்துவரக் காண்கிறோம். அவர்களைப் பெருமைப் படுத்துவது தமிழ்-சமஸ்கிருதம் ஆகிய மொழி களிடையே உறவை வளர்க்கவும், இந்திய தேசிய ஒருமைப் பாட்டை உறுதிப்படுத்தவும் உதவிகரமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

# சமஸ்த அறிஞருடன் தொடர்பு

சமஸ்கிருத மொழி பயில எனக்கு வாய்ப்பில்லையென்ருலும், அம்மொழியிலுள்ள வான்மீகி ராமாயணம், மகாபாரதம், காளிதாசருடைய ரகுவம்சம், மற்றும் அவர் தந்துள்ள நாடகங்கள் ஆகியவற்றிலே பொது அறிவையேனும் பெறவேண்டுமென்ற ஆர்வம் எனக்கு இளமையிலேயே ஏற்பட்டது.

ஒருவர் தனது தாய்மொழியிலுள்ள இலக்கியங்களிலே போதிய அளவு புலமை பெற்றுவிடுவாராஞல், பிற மொழிகளிலுள்ள இலக்கியங்களையும் அறியவேண்டுமென்ற ஆர்வம் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும்.

பிற மொழிகளைப் பயின்ருல்தான் அம்மொழிகளிலுள்ள இலக்கியங்களை நன்கு சுவைக்க முடியுமென்ருலும், அத்தகைய பயிற்சி இல்லாவிட்டாலும் கூட, பிற மொழி இலக்கியங்களில் பொது அறிவையேனும் பெறமுடியும். இந்த உண்மையை நான் உணர்ந்திருப்பதால் வடமொழியிலே புலமை பெற்ற அறிஞர்களோடு பழக விரும்பினேன். அவர்கள் மூலம் வடமொழி இலக்கியங்களிலே பொது அறிவைப் பெறவும் ஆர்வமுடையவஞனேன்.

## சிறையில் இலக்கியப் பயிற்சி

ஆகஸ்டுக் கிளர்ச்சியை யொட்டி நான் வடபுலத்திலுள்ள அமராவதி (மகாராஷ்டிரச்) சிறையில் அடைப்பட்டிருந்தபோது, சமஸ்கிருத மொழியில் நிறைபுலமை பெற்றிருந்த நாவலர் எஸ். சத்தியமூர்த்தி ஐயர், சித்தூர் எம். அனந்தசயனம் ஐயங்கார் ஆகிய சான்ருேர்களுடன் நாள்தோறும் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன்.

1936 தொடங்கி நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி யின் செயலாளனாக இருந்தபோது நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் அதன் தலைவராக இருந்தார் அந்தக் காலத்திலே நாங்கள் நெருங்கிப் பழகினோம் என்றாலும், இலக்கியச் சர்ச்சையில் ஈடு பட்டதில்லை. சிறைச்சாலையில்தான் அதற்கு அவகாசம் கிடைத்தது.

திருவாசகம், திருவருட்பா, மூவர் தேவாரம் ஆகிய பக்தி இலக்கியப் பாடல்களை என் அன்னையாரின் துணை கொண்டு போதிய அளவு பயின்று வைத்திருந்ததாலும், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகளின் புராணச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து கேட்டு வந்ததனாலும் தமிழ் இலக்கியங்களிலே பொது அறிவைப் பெற்றிருந்தேன். இலக்கிய சர்ச்சைகளில் ஈடுபடுவதன் மூலம் அந்த அறிவை வளர்த்துக் கொள்ளவும் முயன்றேன்.

இந்த நிலையில்தான் அமராவதிச் சிறையில் நாவலர் எஸ். சத்தியமூர்த்தி ஐயரோடும் சித்தூர் அனந்தசயனம் ஐயங்கா ரோடும் நாள்தோறும் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு, சமஸ் கிருத இலக்கியம் பற்றி அறியவும், அவற்றிலே பொது அறிவை யேனும் பெறவும் முயன்றேன். திரு எம். அனந்தசயனம் ஐயங்கார் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்தான். என்றாலும், அவர் வாழ்ந்த சித்தூர் நகரம் ஆந்திரத்தோடு இணைக்கப்பட்டிருந்ததால் அவரது குடும்பத்தார் ஆந்திரர்களாக கவே மாறிவிட்டனர். பழுத்த வைணவராதலால் தமிழிலுள்ள நாலாயிரப் பிரபந்தப் பாடல்களை மனனம் செய்து வைத்திருந் தார். தமிழில் உள்ள பிற இலக்கியங்களிலேயும் அவருக்குப் போதிய பயிற்சி இருந்தது. இதன் காரணமாக, ஐயங் காருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

அமராவதி சிறைச்சாலையிலே ஆந்திரத் தலைவர்கள் ஒரு பகுதியிலும், தமிழகத் தலைவர்கள் இன்னொரு பகுதியிலும் வைக்கப் பட்டிருந்தனர். பகல் நேரத்திலே இந்த இரண்டு பகுதிகளிலும் உள்ளவர்கள் எந்த நேரத்திலும் சந்தித்துப் பழக வாய்ப்பு தரப்பட்டிருந்தது.

காலை நேரத்தில் ஆந்திரர்களிருந்த பகுதியில் திரு. ஐயங்கார் சமஸ்கிருதத்திலுள்ள வியாச பாரதத்தை வரிவரியாகப் படித்துத் தெலுங்கிலே விரிவுரை நிகழ்த்தி வந்தார். இரவு நேரத்தில் தமிழ்த் தலைவர்கள் இருக்கும் பகுதியிலே வான்மீகி ராமாயணத்தை வரிவரியாகப் படித்துத் தமிழிலே பொருள் உரைத்து வந்தார் நான் தெலுங்கு மொழி பயின்றவன் அல்ல வென்றாலும், இளமைப் பருவத்தில் தெலுங்கு மொழி பேசும் தேவாங்கர் வீட்டில் நெசவுத் தொழில் செய்து வந்தபோது பேச்சுத் தெலுங்கிலே ஓரளவு பயிற்சி பெற்றிருந்தேன். அதனால், ஐயங்கார் வியாச பாரதத்தைப் படித்துத் தெலுங்கில் தந்த விளக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது

நாளதோறும் மாலை நேரத்திலே நானும் சத்தியமூர்த்தி ஐயர் அவர்களும் சிறைக்குள்ளே உலாவுவோம். அப்போது இலக்கிய விவாதத்திலும் ஈடுபடுவது உண்டு. ஐயர், காளிதாசருடைய ரகுவம்சத்தில உள்ள சிறந்த இடங்களை எடுத்துச் சொல்லி எனக்கு விளக்குவார். வான்மீகி ராமாயணத்திலுள்ள சிறந்த இடங்களையும் எனக்கு எடுத்துச்சொல்லி, அந்த இடங்களில் கம்பர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை என்மூலம் அறிந்துகொள்ள விரும்புவார்.

ஐயருக்கு உடல்நல மில்லாமல் சிறைக்கு வெளியே மருத்துவ மனையிலிருந்த நாட்களில் அனந்தசயனம் ஐயங்காருடன் உலாவச் செல்வேன். அப்போது வடமொழி இலக்கியங்களைப் பற்றி அவருடன் விவாதித்து அதிலே பொது அறிவை வளர்த்துக் கொள்ளமுயல்வேன்.

அமராவதி சிறைக்குச்சென்ற ஆரம்பத்திலே இரண்டொரு மாத காலம் சத்தியமூர்த்தி ஐயரின் விருப்பத்திற்கிணங்க கம்ப ராமாயண வகுப்பு நடத்தலானேன். திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் தொகுத்துள்ள கம்பராமாயண சாரம் என்னும் நூல் சிறையிலே என்னிடம் இருந்தது. அதைக் கொண்டுதான் வகுப்பு நடத்தினேன். சத்தியமூர்த்தி ஐயர் நாள் தவறாமல் வந்து கேட்பார். சில இடங்களிலே விவாதத்தையும் எழுப்பு

வார். அவருக்குத் தமிழிடத்துப் பற்றுண்டு என்றாலும், வட மொழியில் பெற்றிருந்த மிகுந்த பயிற்சியின் காரணமாக கம்ப ராமாயணத்தை விடவும் வான்மீகி ராமாயணமே சிறந்த தென்ற கருத்து அவருக்கு இருந்தது. சில இடங்களில் கம்ப னுடைய வருணனையை அவர் ரசிக்க முடியாதவரானார் அந்த மாதிரியான இடங்களில் ஐயருக்கும் எனக்கும் கடுமையான விவாதம் நடந்ததும் உண்டு.

## சாஸ்திரியாருடன் உரையாடல்

சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர் சமஸ்கிருதத்தில் நிறை புலமையுடைய மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியா ரோடும் ராஜாஜியின் மூலம் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. திரு. டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார், திரு ஜி ஏ. நடேசன் ஆகியோருடன் மகாகனம் சாஸ்திரியார் மாலை நேரத்தில் கடற் கரையில் அமர்ந்து உரையாடுவார். மயிலைப் பகுதியில் இப்போது காந்தியடிகளின் உருவச் சிலை இருக்குமிடத்திற்கருகில் அவர்கள் அமருவது உண்டு அடிக்கடி ராஜாஜியும் அங்கு சென்று உரை யாடி மகிழ்வார் அவருடன் நானும் செல்வேன்.

பேரறிஞரான சாஸ்திரியார், தமிழிலே பற்றும் பயிற்சியும் உடையவன் என்ற காரணத்திற்காக மிகவும் எளியவனான என்னை மிகவும் மரியாதையோடு நடத்தினார்; அன்போடு பழகினார். வான்மீகி ராமாயணத்திலுள்ள சில இடங்களை எடுத்துச் சொல்லி, அந்த இடங்களிலே கம்பர் செய்துள்ள மாறுதல்களை என்மூலம் அறிந்துகொள்ள சாஸ்திரியார் விரும்பு வார். கம்பரின் புலமையிலே அவருக்கு மிகுந்த மயக்கம் உண்டு.

சாஸ்திரியார் மயிலையில் நிகழ்த்திய வான்மீகி ராமாயணத் தொடர் சொற்பொழிவுகளிலே சிலவற்றைக் கேட்டும், அந்த மாகாப்பியத்திலே எனக்குள்ள பொது அறிவை வளர்த்துக் கொண்டேன். அவர் ஆங்கிலத்திலே நிகழ்த்திய அந்தத் தொடர் சொற்பொழிவு தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டு வெளி

வந்துள்ளது. அதைப் படித்தும் சாஸ்திரியாரின் ஆராய்ச்சி ரீதியான முடிவுகளை முழு அளவில் அறிந்து கொண்டேன்.

நான் ராஜாஜியுடன் கடற்கரைக்குச் செல்லாத நாட்களிலே சாஸ்திரியார் மிகவும் வருந்துவது உண்டு ''நேற்று நீங்கள் வராததால் சாஸ்திரியார் 'இலக்கிய சர்ச்சை செய்ய கிராமணியார் இல்லையே' என்று சொல்லி வருந்தினர்'' என்று ராஜாஜி என்னிடம் சொல்வது உண்டு.

## ''மீண்டும பிறந்தால்......''

சாஸ்திரியாருக்குத் தமிழ் இலக்கியத்திலே பயிற்சி இல்லையென்றாலும் அதற்காக அவர் பெரிதும் வருந்தினர். அவருடைய சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, ''மீண்டும் பிறந்தால்...' என்னும் தலைப்பில் நூல் வடிவில் வெளிவந்துள்ளது. அதிலே, தமிழில் புலமை பெறத் தவறியதற்காகத் தமது வருத்தத்தை அவர் வெளியிட்டுள்ளார். 'மீண்டும் பிறந்தால் தமிழிலே புலமை பெறுவதையே விரும்புவேன்' என்று அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

சமஸ்கிருத இலக்கியங்களிலே — குறிப்பாக, வான்மீகி ராமாயணம், வியாச பாரதம் ஆகியவற்றிலே பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கு சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் எனக்குப் பெரிதும் பயன்பட்டார் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவஸோத்சவ பங்களாவில் தீட்சிதர் நிகழ்த்திய ராமாயண-மகாபாரதச் சொற்பொழிவுகளை அடிக்கடி சென்று கேட்டிருக்கிறேன் ராஜாஜியும் தவறாமல் வந்து கேட்டது உண்டு. அப்போது பல நாட்களிலே நானும் அவருடன் சென்று கேட்டிருக்கிறேன் சமஸ்கிருத சுலோகங்களைத் தீட்சிதர் இசை நயத்தோடு எடுத்துச் சொல்லும்போது, அம்மொழியிடத்துப் பற்றும் பக்தியும் ஏற்பட்டுவிடும். அவ்வளவு திறமையாகச் சொல்லுவார். அவருடைய குரல் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய தொடர் சொற்பொழிவுகள் ஒன்றிரண்டைத் தொடங்கிவைத்து அவரைப் பாராட்டிப் பேசும் வாய்ப்பினையும் யான் பெற்றதுண்டு.

# புரோகிதர்களும் சமஸ்கிருதமும்

தமிழகத்திலே 'புரோகிதர்கள்' எனப்படுவோரில் மிகப் பெரும்பாலோர் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டவர்கள். அதிஷ்டவசமாக, அவர்கள் தமிழின் மூலம்தான் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி தருகிறார்கள், தமிழினிடத்தில் பற்றுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். தமிழிலே காவடிச் சிந்து என்னும் புதிய சந்தத்தைப் படைத்தளித்த அண்ணாமலை ரெட்டியார் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டவர் என்பதை இங்கு நான் நினைவூட்ட வேண்டும்.

தமிழகத்தின் நிரந்தரக் குடிகளாகிவிட்ட தெலுங்கரெல்லாமும் தமிழிலேதான் கல்வி கற்கிறார்கள். புரோகிதப் பிராமணர்கள் தெலுங்கில் பிழையாகத்தான் பேசுகிறார்கள். காரணம், அந்த மொழியிலே கல்வி கற்காததாகும்,

தங்களுடைய தொழிலுக்குரிய சமஸ்கிருத மொழியிலேயும் அவர்களுக்கு ஆரம்பப் பயிற்சிகூடக் கிடையாது. திருச்சியிலே 1963 செப்டம்பர் இறுதியில் அங்குள்ள பிராமணர்கள் சார்பில் காஞ்சி காமகோடிப் பெரியவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அப்போது அவர் கூறியது வருமாறு;

''சமஸ்கிருதப் பழக்கம் தமிழகத்துப் பிராமணர்களிடையே அருகி வருகிறது அம்மொழியைப் பிராமணர்கள் புறக்கணித்து விட்டார்கள். தமிழிலாவது புலமை பெற்றிருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. அதிலும் பிராமணர்களின் அறிவு சூன்யமாகவே இருக்கிறது. பெரிய புராணம் தெரிந்த பிராமணர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? கோயிலில் வேதம் ஓதும்

குருக்களுக்கும் சமஸ்கிருதம் தெரியவில்லை. சமஸ்கிருதத்தைத் தமிழிலே எழுதி மனப்பாடம் பண்ணி, கிளிப்பிள்ளை போல் ஒப்புவிக்கிறார்கள். மேல்நாட்டி லிருந்து பலர் வந்து சமஸ்கிருத நூல்களை மிகவும் மகிழ்ச்சியுடன் கற்று வருகின்றனர் நாமோ சமஸ்கிருதத்தைப் புறக்கணித்துவிட்டோம்.''

('தமிழ் நாடு' — 21-9-63 இதழில் வெளியானது)

திருமணங்களிலே பழைய முறையிலான புரோகிதச் சடங்குகள் தேவையில்லை என்பது பகுத்தறிவு வாதமாக இருக்கலாம் அது வேறு விஷயம் அதிலே புகுந்து இங்கு நான் எனது கருத்தைச் சொல்வது எடுத்துக்கொண்ட விஷயத்தி லிருந்து விலகிச் செல்வதாகும். புரோகிதம் வேண்டுமென்போர் கூட; அதைத் தமிழில் நடத்த விரும்பும் காலம் இது. ''எங்கும் தமிழ்' எதிலும் தமிழ்'' என்னும் கொள்கையுடைய எனக்கும் புரோகிதத்திலும் தமிழுக்கு இடமிருக்க வேண்டுமென்பது உடன்பாடான கொள்கைதான்!

## தோற்றுவிட்டது!

இந்து சமயத்தினரின் ஒருமைப்பாட்டைக் கருதித்தான் இந்துக்களாகவுள்ள தமிழர் இல்லத் திருமணங்களிலே சமஸ்கிருதத்தை நமது முன்னோர் புகுத்தினர் எனலாம். ஆனால், அது தோல்வி யடைந்து விட்டது. சமஸ்கிருதத்தைப் படிக்கும் வழக்கம் குறைந்து வருவதால் புரோகிதத் தொழில் புரிவோருக்குக்கூட சமஸ்கிருத ஞானம் அடியோடு இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையிலே சமஸ்கிருதத்திற்குரிய தேவநாகரி லிபியைக் கூடப் பயிலாதவர்கள் தமிழ் எழுத்துக்களிலோ தெலுங்கு எழுத்துக்களிலோ திருமணத்திற்கான சமஸ்கிருத மந்திரங்களை எழுதி மனனம் செய்து ஒலிப் பிழையோடு உளறுவதால் யாருக்கு என்ன பயன்?

சமஸ்கிருத மந்திரங்களைப் பிழையாக ஒலித்தால் மணமக்களுக்குத் தீங்கு நேரக்கூடும் என்ற நம்பிக்கையும்

சமஸ்கிருத மொழியை நன்கு பயின்றவர்களிடையே இருந்து வருகிறது. சமஸ்கிருத மொழியைப் பிழையறப் பயின்றுவைத்துப் புரோகிதத் தொழில் புரிவோர் இருப்பார்களாயின, அந்தப் புரோகிதர்களைக் கொண்டு தமிழர் தங்கள் வீட்டுத் திருமணங் களைச் செய்வதை ஏற்கலாம்.

## ராஜாஜியும் ஏற்ருர்!

என்னுடைய மகன் திரு ம.சி. திருநாவுக்கரசின் திருமணத் தின்போது என் பெருமதிப்புக்குரிய தலைவர் ராஜாஜியின் இல்லத்திற்குச்சென்று, அவருக்கு அழைப்பிதழைத் தந்து, அவசியம் திருமணத்திற்கு வந்து மணமக்களை வாழ்த்த வேண்டு மென்று வேண்டிக்கொண்டேன். அப்போது அவர், 'திருமணம் எப்படி நடக்கும்? 'அவர்கள்' நடத்துகிருர்களே அதுபோலவா?' என்று என்னைக் கேட்டார். 'அவர்கள்' என்று ராஜாஜி குறிப் பிட்டது அப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த தி.மு க.வினரைத்தான். "அப்படி நடக்காது. புரோகித முறைப் படித்தான் நடக்கும். ஆனல், தமிழிலே நடக்கும்" என்று நான் சொன்னேன்.

ராஜாஜி, 'ஏன் உங்களுக்குச் சமஸ்கிருதம் பிடிக்காதோ?' என்று என்னைக் கேட்டார். நான், "சமஸ்கிருதத்தில் பிழை யில்லாமல் மந்திரங்களைச் சொல்லும் புரோகிதர் தங்களுக்குத் தெரிந்திருந்தால் அவரைக் கொடுத்து உதவுங்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொன்னேன். அவர் சிரித்துக் கொண்டே, "சமஸ்கிருதம் தெரிந்த புரோகிதர் எங்கேயிருக்கிருர்!" என்று சொன்ஞர்.

உண்மை நிலை இதுவாக இருப்பதால் தமிழரிலே இந்துக்க ளாக இருப்போர் தங்கள் சமயத்தின் பொதுமொழியான சமஸ்கிருதத்தின் மூலம் தங்கள் குடும்பங்களில் நடைபெறும் திருமணச் சடங்குகளை நடத்த சந்தர்ப்பமே இல்லை.

சமஸ்கிருதத்தில் பற்றுடையவர்கள் இந்த நிலையை மறந்து போலித்தனமான புரோகித முறையை வற்புறுத்துவது சமஸ்கிருத மொழியை வளர்ப்பதற்கோ இந்துமதத்தை வலுப் படுத்துவதற்கோ பயன்படாது. இதனாற்றான், தமிழர் இல்லங் களிலே மங்கலச் சடங்குகள் தமிழிலே நடப்பதை நான் விரும்புகிறேன்.

## நேருஜியின் கருத்து

இந்திய மக்களாகிய நம்மிலே ஒவ்வொருவருடைய உள்ளத் திலும் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி உறுதிப்பாட்டுடன் இருக்கு மானால், மொழி வேற்றுமை காரணமாக நம்மிடையே விரோதங்கள் வளர்வதற்கு நியாயமில்லை. மொழிப் பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்குமிடையே போராட்டம் இருக்கிற தென்றால், இந்த இரண்டிலே எந்த ஒன்றிலும் உண்மையான, பற்று நமக்கு இல்லையென்பதையே அது புலப்படுத்தும். இதுபற்றி விடுதலை பெற்ற பாரதத்தின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு கூறியதை இங்கு நினைவில் கொள்வோம்:

> "எழுத்தறிவில்லாதவர்களும் சிறுபுத்தி படைத்தவர் களுந்தான் ஒரு இந்திய மொழியை மற்றொரு மொழிக்கு எதிராக வைத்துப் பேசுவார்கள். ஒருமொழி மற்றொரு மொழியைக் காட்டிலும் உயர்ந்தது என்று கூறுவார்கள். புத்திசாலித் தனமுள்ளவர்கள் மொழிச் சண்டைக்கு இட மளிக்காமல் மற்ற மொழிகளைக் கற்க முயலுவார்கள்"

(நேருஜியின் 'அச்சம் தவிர்த்த அண்ணல்' ; பக் 67)

தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன் என்றால், அதற்குக் காரணம் பிறமொழித் துவேஷமல்ல. எனக்குத் தெரிந்த தாய்மொழியிலே எனது வாழ்க்கையை நான் நடத்த வேண்டும். இதற்குத் தடையாக இன்னொரு மொழி இருப்பதற்கு நான் அனுமதிக்க முடியாது. இது, வாழ்க்கை நியதி-நீதி-நெறி!

தமிழக அரசின் அலுவலகங்களிலே ஆட்சி மொழியாகவும், நீதிமன்றங்களிலே நிர்வாக மொழியாகவும் கல்லூரிகளிலே பாட போதனை மொழியாகவும் தமிழ் ஒன்றே இருக்கவேண்டு மென்று நான் சொல்லும்போது, பிறமொழி பேசும் மாநிலங்களிலும் இதே நிலைமை இருக்கவேண்டு மென்றுதான் விரும்புகிறேன். தமிழ்த் தேசத்தில் எங்கும் எதிலும் தமிழுக்கு முதன்மை ஏற்படுவது போல, தெலுங்கு தேசத்தில் தெலுங்குக்கும், மலையாள (கேரள) தேசத்தில் மலையாளத்திற்கும், கர்னாடக தேசத்தில் கன்னடத்திற்கும் முதலிடம் இருக்க வேண்டும். சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளவன் தலையெடுத்து வாழவும் வளரவும் இதுதான் வழி. வடபுலத்திலுள்ள மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழிகளே தலைமை பெற வேண்டும். இந்த அடிப்படையில் பார்த்தால்கூட, 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்பது ஆங்கில மொழியின்பால் உள்ள பகைமையால் அல்ல என்பது புலப்படும்.

## பக்திப் பிரச்னையே!

தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே தலைமை பெற்ற பின்னரும் பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடமொழிகளிலே ஆங்கிலமும் ஒன்றாக இருக்கும்; இருக்கவும் வேண்டும். ஆனால், அது கட்டாய பாடமாக இருக்காது- அவ்வளவுதான்.

தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையிலே நான் சொல்லும் இந்த நியாயம் தமிழ்-சமஸ்கிருதப் பிரச்னைக்கும் பொருந்துவதாகும். ஆம்; கல்வியின் ஒரு கட்டத்தில் தமிழகத்துப் பள்ளிகளில் சமஸ்கிருதமும் விருப்பப் பாடமாக இருக்கலாம்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் வழிபாடு தமிழில் நடை பெறவேண்டும் என்பதும் சமஸ்கிருதத் துவேஷத்திலிருந்து பிறந்த கோரிக்கையல்ல. இது, தமிழ்—சமஸ்கிருத மொழிகளிடையிலான பிரச்னைபோலத் தோன்றினாலும், உண்மையில் பக்தி நெறி சம்பந்தப்பட்ட சமயப் பிரச்னையேயாகும்.

சமஸ்கிருதம் இந்துக்களின் பொதுமொழியாக இருப்பதன் காரணமாக, இம்மொழியில் 'பீஜ மந்திரம்' என்று சொல்லப் படுகிறதே அதைமட்டும் திருக்கோயில்களில் அர்ச்சகர் பயன் படுத்தலாம். அதில் தவறில்லை. சமஸ்கிருத அருச்சனையை விரும்புவோருக்கும் தடைசொல்லத் தேவையில்லை. இது இந்து மதத்தவரின் ஒருமைப்பாட்டுக்கும் உதவி புரியும்.

தமிழ்நாட்டிலுள்ள கத்தோலிக்கக் கிறித்துவர்களின் சர்ச்சு களிலே தமிழில் வழிபாடு நிகழ்த்த ரோம் நகரிலுள்ள வாடிகன் கவுன்சில் அனுமதித்திருக்கிறது. ஆனால், பீஜ மந்திரத்தை மட்டும் லத்தீன் மொழியிலே சொல்லவேண்டும் என்பது நிபந்தனை. தமிழரிலே கிறித்துவர்களால் கடைப்பிடிக்கப்படும் இந்த சமய நியதி இந்துக்களாக இருப்பவர்களுக்கும் பயன் படலாந்தானே!

## இஸ்லாமியரும் ஏற்பர்

இஸ்லாமியத் தமிழர்களுடைய மசூதிகளிலே அரபு மொழி மட்டுமே இப்போது வழிபாட்டு மொழியாக இருந்து வருகிறது. காலப் போக்கிலே அவர்களும் பிரதான மந்திரத்தை மட்டும் அரபு மொழியில் வைத்துக்கொண்டு பொது வழிபாட்டிற்குத் தமிழைப் பயன்படுத்தும் காலம் வரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இது மதப் பிரச்சினை யாதலால், மொழி உணர்ச்சிக்கு முதலிடம் தந்துவிடக்கூடாது. மதவழித்தான் மொழி செல்ல வேண்டும். அதற்காக எவ்வளவு காலம் காத்திருந்தாலும் தவறில்லை.

அண்மைக் காலமாக, தமிழ்நாட்டு முஸ்லிம்கள்-குறிப்பாக, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், தங்கள் வீட்டுத் திருமணங்களில் அரபு மொழியில் புலமையுடைய மௌல்வியைக் கொண்டு திருமணம் நடத்துங்கால், முக்கிய மந்திரங்களை அம் மொழியில் சொன்னபிறகு மற்ற நடவடிக்கைகளைத் தமிழில் நடத்துவதை நான் நேரில் கண்டு மகிழ்ந்ததுண்டு. தமிழகத்தில் ஆட்சிமொழியாக—நீதிமன்றங்களிலே நிர்வாகமொழியாக —

கல்லூரிதோறும் பாடபோதனை மொழியாக தமிழே வந்தா வேண்டுமானால் இஸ்லாமியத் தமிழரின் வாழ்க்கையிலும் தமிழே முதன்மொழியானதை நாம் காண முடியுமென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழக அரசு தமிழ்-ஆங்கிலம் ஆகிய இருமொழிகளை மட்டும் பாடமொழிகளாகக் கடைப்பிடித்து வருவதாக வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. இது, இந்தி மொழியை விருப்பப் பாடமாகக்கூட ஏற்பதில்லையென்று 23-1-68ல் தமிழக சட்டமன்றம் செய்த தீர்மானத்தின் விளைவாகும். ஆனால், நடைமுறையில் அது சரியாக அமுல் நடத்தப்படவில்லை. தமிழரல்லாதார் தமிழைக் கைவிட்டுத் தங்கள் தாய்மொழியை எடுத்துப் படிக்க அனுமதி வழங்கப்படுகிறது. ஆங்கிலம் கட்டாய பாடம். அதைக் கைவிட முடியாது. ஆனால், தமிழகத்தின் ஆட்சி மொழியாகவும் பல்கலைக்கழகப் பாடமொழியாகவும் நீதிமன்றங்களிலே நிர்வாக மொழியாகவும் இருக்கக் கூடிய தமிழை விட்டுத் தெலுங்கையோ, மலையாளத்தையோ, கன்னடத்தையோ, உருது அல்லது அரபு மொழியையோ எடுத்துப்படிக்க மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று அறிகிறேன். இதுபோல, விரும்புவோர் சமஸ்கிருதத்தை ஏற்றுப் படிக்கவும் அனுமதித்தல் தவறாகாது.

முஸ்லிம்களின் மத உணர்ச்சிக்கு மதிப்பளித்துத்தான் உருது அல்லது அரபு மொழியை எடுத்துப் படிக்கத் தமிழக அரசின் கல்விமொழிக் கொள்கை வளைந்து கொடுக்கிறது. அதுபோல, இந்துக்களின் மத உணர்வுக்கும் மதிப்பளித்து விரும்புவோர் சமஸ்கிருதத்தை எடுத்துப்படிக்கவும் அனுமதிப்பது தவறாகாது.

## கான்வெண்டுகளில் சமஸ்கிருதம்

தமிழ் நாட்டிலே வளர்பிறைபோலப் பெருகிவரும் ஆங்கில கான்வென்டுப் பள்ளிகளிலே இந்தி கட்டாயபாடமாகக் கற்பிக்கப் பட்டு வருகிறது. அரசின் கல்விக் கொள்கையானது இந்திக்கு

எதிரானது. ஆனால், கான்வெண்டுகளில் இந்தி மொழி கட்டாயப் பாடம்! அதுபோல, சமஸ்கிருதமும் கான்வெண்டுகளில் விருப்பப் பாடமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

இந்துக்களின் நால் வேதங்கள், உபநிடதங்கள், மற்றும், வேதாந்த-சித்தாந்தச் சாத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட மொழியாதலால், மத நம்பிக்கையுடையவர்கள் சமஸ்கிருதத்தை அடியோடு கைவிடுவதற்கில்லை. அதனால், தமிழரில் அம்மொழியில் புலமை பெற்றோர் சிலரேனும் வாழையடி வாழையெனத் தோன்றி வந்துள்ளனர். இந்த நூற்றாண்டிலும் மறைமலையடிகள், பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், வேதாந்த கேசரி பேராசிரியர் கோ. வடிவேலு செட்டியார், தத்துவப் பேராசிரியர் டி. எம். மகாதேவன், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் பதிவாளர் திருஞானசம்பந்தம், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை போன்ற தமிழில் நிறைபுலமை பெற்ற பிராமணரல்லாத அறிஞர் பலர் சமஸ்கிருதத்திலும் புலமை பெற்றவர் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும். 'தனித் தமிழ்க் காவலர்' எனச் சிறப்புப் பெயர் பெற்ற மறைமலையடிகளார், சமஸ்கிருதத்தில் காளிதாசன் எழுதிய 'சாகுந்தலம்' என்னும் நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

திராவிட இயக்கக் கவிஞரான புதுவைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் சமஸ்கிருதம் பயின்றவரல்ல. அப்படியிருந்தும், பயின்றவர் துணைகொண்டு சமஸ்கிருதத்திலுள்ள 'பில்கணீயம்' என்னும் சிற்றிலக்கியத்திற்கு சுவைமிக்க கவிதைத் தமிழில் 'புரட்சிக் கவி' என்னும் பெயரில் வழிநூல் தந்துள்ளார்.

## சமஸ்கிருதம் புறக்கணிக்கப்படவில்லை

ராசா சர். டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, இமயம்போல் வளர்ந்தோங்கியுள்ள

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சமஸ்கிருதத்திலுள்ள பேரிலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதைத் தனது பணிகளிலொன்றாகக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் அது வெளியிட்டுள்ள நூல்களில் கௌடல்யரின் அர்த்த சாத்திரமும் ஒன்றாகும்.

'ஒற்றியூரானடிமை' எனச் சிறப்புப் பெயர் பெற்றிருந்த சென்னை திரு. இராமசாமிப் பிள்ளை என்பவர், சாம வேதத்தை சமஸ்கிருதமறிந்த ஞானியொருவரைக் கொண்டு தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டதை முன்பே அறிந்தோம்.

ஒரு தலைமுறைக்கு முன்புவரை. சைவ மடங்களில் ஆதீனகர்த்தர்களாக வருவோருக்கு சமஸ்கிருத மொழிப் புலமையும் ஒரு தகுதியாகக் கருதப்பட்டு வந்ததை நானறிவேன். திருப்பாதிரிப்புலியூர் சைவ மடத்து ஆதீனகர்த்தரான ஞானியார் சுவாமிகள் சமஸ்கிருதத்தில் நிறைபுலமையுடையவர்.

தமிழ் நாடகாசிரியர் பலர் சமஸ்கிருதத்திலுள்ள வியாச பாரதத்திலிருந்து பல்வேறு பகுதிகளை—கிளைக்கதைகளை தமிழிலே நாடகங்களாக்கி நடத்தி வழிவழி தமிழ் நாடகக் கலையை வளர்த்து வந்துள்ளனர். அத்தகைய நாடகாசிரியர்களிலே தவத்திரு சங்கரதாச சுவாமிகள் முக்கியமானவராவார். சமீப நூற்றாண்டுகளிலே சமஸ்கிருத மொழியிலுள்ள கதைகளைக் கொண்டுதான் தமிழ் நாடக உலகம் வாழ்ந்து வந்திருக்கிறதென்பதை மறந்துவிடக் கூடாது.

தமிழ்-சமஸ்கிருத மொழிகளிடையில் உறவு ஏற்படத் தொடங்கிய காலத்தை இதுவரை யாரும் வரையறுத்துச் சொல்லவில்லை. தமிழும் சமஸ்கிருதமும் புராதன மொழிகளென்பதை மறுப்பாரில்லை. அதுபோல, அவற்றிடையில் புராதன காலந் தொட்டே உறவு இருந்து வருகின்ற தென்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை,

இதுபற்றி 1980ல் மதுரையில் நடந்த 5-ஆவது உலகத்தமிழ் மாநாட்டின்போது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடந்த கருத்தரங்கிலே, "சமயங்கள் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் பேசியபோது விவரித்தேன். அதனைச் "சிலம்புச் செல்வரின் பல்கலைப் பேருரை" என்னும் எனது நூலில் காணலாம்.

கிறித்துவுக்குப் பிற்பட்டதான இரண்டாயிரமாண்டு காலத்தில் உலகெங்கும் சமயங்கள் மக்கள் மீது செல்வாக்குப் பெற்றன வென்று கூறப்படுகிறது. இதற்குத் தமிழினத்தார் மட்டும் விலக்காக இருப்பது சாத்தியமில்லைதானே!

## மதத்திற்கு முதலிடம்

கிறித்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழிலே வடபுலத்து மொழிகள் செல்வாக்குப் பெறுவது சமண-பௌத்த மதங்கள் மூலமாகத்தான் தொடங்குகின்றது. இதனைத் தமிழில் தோன்றிய முதல் காப்பியமெனப்படும் சிலப்பதிகாரத்திலேயே காண முடிகின்றது.

சமண-பௌத்த சமய வாதிகள் தமிழ் மொழிக்கு வாழ்வு தந்தது தங்கள் மத வழியில்தான் என்பதனை மறந்து விடுவதற்கில்லை. சமஸ்கிருதத் தொடர்பின் மூலம் கிறித்துவுக்கு முற்பட்ட நூற்றுண்டுகளிலே இருந்து மதவழிப்பட்ட சமஸ்கிருதச் சொற்களும் வேத-சாத்திரக் கருத்துக்களும் தமிழிலே கலந்து விட்டன வென்றுலும்; அதனுல் தமிழின் தனித்தன்மை பாதிக்கப்படவில்லை.

சமண-பௌத்த மதங்கள் தமிழகத்தில் செல்வாக்கு பெற்ற பின்னர்தான் அவற்றுடன் போட்டி போட்டுக்கொண்டு இந்து மதவாதிகளும் தமிழ்-சமஸ்கிருதக் கலப்புக்கு வழி செய்தனர். சமஸ்கிருதச் சொற்கள் கருத்துக்கள் கலந்தன. சமஸ்கிருத நூல்களுக்கும் தமிழில் வழி நூல்கள் படைக்கப்பட்டன. இந்தக் கலப்பு தவிர்க்க முடியாததாகும்.

இதற்கும் பிற்பட்ட காலத்தில் இஸ்லாமிய-கிறித்துவ வேதங்களும் அரபு-லத்தின் மொழிகளும் தமிழரிலே ஒரு சாரார் மீது செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியதை வரலாறு காட்டுகிறது. ஆகவே, கிறித்துவுக்குப் பிற்பட்ட காலம் உலக முழுவதுமே மக்கள் மீது பல்வேறு மதங்கள் ஆதிக்கம் பெற்றதை நினைக்கும் போது கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்குப்பின் இந்து மதம் காரணமாகவும் தமிழின் மீது சமஸ்கிருதம் செல்வாக்குப் பெற்றதைம் காலத்தின் கட்டளையென்றே சொல்ல வேண்டும். மதத்தில் நம்பிக்கை யுடையவர்கள்-அவர்கள் இந்துக்களாயினும் இஸ்லாமியராயினும் கிறிஸ்துவராயினும் – மகிழ்ச்சியோடு இதனை ஏற்கத்தான் செய்கின்றனர். அந்த வகையில் மதங்களாலும் தமிழ்மொழி புதிய வாழ்வையும் வளர்ச்சியையும் பெற்ற தென்பதனை மறுப்பதற்கில்லை. எந்த மதத்திலும் நம்பிக்கையற்றவர்கள்—குறிப்பாக, இந்து மதத்தை வெறுப்பவர்கள் கருத்து இதிலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம்.

தமிழால் சமஸ்கிருத மொழி வாழ்வு பெற்ற தென்பதையும் இந்து மதவாதிகள் மறுப்பதற்கில்லை. சமஸ்கிருதம் வடமொழி என்றும் பெயர் பெற்றுள்ளது. இதில் தவறில்லை யென்றாலும். அம்மொழிக்குப் புதுவாழ்வு அளித்த பெருமை தென்னகத்தாருக்கு—குறிப்பாக, தமிழகத்தாருக்கு உண்டென்பதையும் இங்கு நான் நினைவூட்ட வேண்டும்.

## சமஸ்கிருதம் வளர்த்த தென்னவர்

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து இஸ்லாமிய மன்னர்கள் இந்தியாவில் புகுந்து தங்கள் மதத்தைப் பரப்ப ஆட்சியைப் பயன்படுத்தியபோதுதான் பிறந்த வடபுலத்திலேயே சமஸ்கிருதத்தின் வளர்ச்சி சிறிது மங்கலானது. இதனை மகாகவி பாரதியார் தமது உரை நடைக் கட்டுரைகள் பலவற்றிலும் 'சத்ரபதி சிவாஜி' என்னும் பாடலிலும் விவரிக்கிறார்.

மொழியோ, இலக்கியமோ வளர வேண்டுமானல், நாட்டில் அமைதி நிலவ வேண்டும். ஆனல், ஈரானியரும் துரானியரும் புகுந்த காரணத்தால் வடபுலம் அமைதியற்ற போர்க்களமானது. இந்த அவல நிலை சில நூற்றுண்டுக்காலம் நீடித்தது.

அந்தக் காலத்திலே சமஸ்கிருத மொழியையோ, இலக்கியங்களையோ வளர்ப்பதற்கு அன்னிய ஆட்சியாளருடைய ஆதரவு இந்துக்களுக்குக் கிடைப்பது அரிதாயிற்று. மன்னர்களைச் சார்ந்து வாழ்ந்தே வழக்கப்பட்டுவிட்ட வடமொழிப் புலவர்கள் கொம்பையிழந்த கொடிபோலாயினர்.

அந்தக் காலத்திலும் தென்புலத்திலே அமைதி நிலவியது; புராதன வேத மதத்தில் நம்பிக்கை யுடையவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்தனர். தமிழகத்திலே புறச்சமயங்களாக-வேத விரோத மதங்களாக—கருதப்பட்ட சமண பௌத்த மதங்கள் சைவ-வைணவ சமயங்களைச் சார்ந்த ஆசாரியர்களால் வெல்லப் பட்டு, அகச் சமயங்கள் புதுவாழ்வு பெற்றிருந்தனவென்று சொல்லலாம். அந்தக் காலத்திலே தென்னகத்தில் சங்கரர், ராமானுஜர், மாத்வர் ஆகியோர் தோன்றினர். இவர்களில் சங்கரரும் ராமானுஜரும் தமிழ் நாட்டவர்.

இம்மூவரும் சமஸ்கிருதத்திலே பெரும் புலமை பெற்று, வடபுலத்திலே யாத்திரை செய்து, அங்கு தங்கள் தத்துவங்களைப் பரப்புவதற்காக மடங்களை நிறுவி, சீடர்களைத் தோற்றுவித்தனர். இதனல், சமஸ்கிருதம் புதுவாழ்வு பெற்றது. அம்மொழியிலுள்ள பழைய வேதாகம சாஸ்திரங்களுக்குப் புதுப்புது வியாக்கியானங்களைக் கூறும் வழி நூல்களையும் தென்னகத்து ஞானியர்கள் படைத்துக் கொடுத்தனர். அந்தப் பணியில் சங்கரரே தலைசிறந்து விளங்கினர். அவர் அமைத்துக் கொடுத்த மடங்களை நடத்த அவருக்குப் பின் தோன்றியவர்களும் 'சங்கராச்சாரியார்' என்று அழைக்கப்படுவது வழக்கமாகி விட்டதால், சமஸ்கிருதத்துக்கும் வேத மதத்துக்கும் வேதாந்தத் தத்துவத்துக்கும் புதுவாழ்வு

அளித்த சங்கரர் 'ஆதி' என்ற அடைமொழியோடு அழைக்கப் படுகிறார். இதன்படி, வடமொழி எனப் பெயர் பெற்ற சமஸ்கிருதம் தென்புலத்து ஞானியரால் மறுவாழ்வு பெற்ற தென்பதை நினைத்து வேத மதத்தில் நம்பிக்கையுடைய தமிழர் ஒவ்வொரு வரும் பெருமை கொள்ளலாம்.

## முதலில் வழிநூல் படைத்தவர்கள்

சமஸ்கிருதம், பாலி போன்ற வடபுலத்து மொழிகளை யொட்டித் தமிழிலே முதன் முதலில் வழி நூல் படைத்தவர்கள் வேத மதம் எனப்படும் இந்து மதத்தவரல்ல; சமண—பௌத்த மதத்தவரே! இதற்கு மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங் கதை ஆகிய பெருங்காப்பியங்களே சான்றாகும். இந்தக் காப் பியங்கள் தமிழர் பண்பாட்டைத் தழுவியவையல்ல. சமஸ்கிருதக் காப்பியத்திற்கு தமிழிலே வழிநூல் படைத்துத் தமிழர் பண்பாட்டையும் காத்த முதற் கவிஞர் கம்பரே யாவார்.

ஆதிசங்கரரின் வடபுலப் பயணம் எளிதாக இருக்கவில்லை. துரிதப் போக்குவரத்துச் சாதனம் ஏதுமில்லாத அந்நாளில் பிள்ளைப் பருவத்தினரான சங்கரர் வடபுலத்திற்குப் பாதயாத் திரை செய்து, அங்கு ஆட்சி புரிவோரின் ஆதரவோடு தம்மை எதிர்த்த சமண-பௌத்த மதவாதிகளுடன் வாதப்போர் நடத்தி வெற்றி கண்டார். இது, தென்னகத்திற்கு ஆதி சங்கரரால் கிடைத்த தனிப்பெருமையாகும்.

தென்னகத்தார்—குறிப்பாக, தமிழகத்தார் பண்டை நாளில் வடபுலத்தின் மீது தலைமை பெற்றது வேத மதத்தின் ஆதி மொழியான சமஸ்கிருதத்தின் மூலமாகத்தான் என்பதனை மறந்து விடுவதற்கில்லை

தமிழினத்தாரின் வாழ்வு எந்த அளவுக்கு வேத மதத்தி லிருந்து காலப் போக்கில் விலகி வந்ததோ அந்த அளவுக்கு வட புலத்தார் மீது பெற்ற தலைமையையும் இழக்க நேர்ந்ததென்று

சொல்லலாம். இதனால், இந்திய ஒருமைப்பாட்டுணர்ச்சியும் தமிழினத்தாரிடையே பலவீனப்படலானது. இன்னொரு வகையில் சொல்வதானால், இந்திய ஒருமைப்பாட்டை அரசியல் ரீதியில் விரும்பாதவர்களே வேத மதத்தின் மீது தமிழினத்தாரிடையே வெறுப்பை வளர்க்க முயன்று வந்திருப்பது நாம் கண்கூடாகக் கண்டு வரும உண்மையாகும். மற்றும், விஞ்ஞான சகாப்தத்தில் மதத்தின் தேவை குறைந்து வருகிறது. தேசிய ஒருமைப்பாட்டைக் கருதியேனும், இந்துக்கள்-குறிப்பாக, தமிழகத்தார் இந்து மதத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வரவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் இஸ்லாம் கிறித்துவ மதங்களும் இருக்கின்றன. அவையும் இந்திய மதங்களாகி விட்டன வென்றாலும், இந்தியாவின் ஆதி மதமான இந்து மதந்தான் இந்திய ஒருமைப் பாட்டின் ஆணிவேராக இருந்து வருகிறது. இந்து மதத்தை ஏற்கும் எவரும் சமஸ்கிருதத்தை வெறுத்தொதுக்க இயலாது.

தமிழ் மொழியின் தனித்தன்மைக்கும் பல மதத்தவரையும் தன்னுட் கொண்டு விட்ட தமிழ் இனத்தவரின் ஒருமைப்பாட்டிற்கும் கேடற்ற வகையில் தமிழ்-சமஸ்கிருத உறவை வளர்க்க முடியும். இந்த உறவு சமூக சீர்திருத்தத்திற்கு எதிரானதல்ல. சமஸ்கிருதத்தில் நிறை புலமை பெற்று இராமலிங்க சுவாமிகள் சமய வேற்றுமைகளைக் கடந்த சமுதாயச் சீர்திருத்த வாதியாக விளங்க வில்லையா? சமஸ்கிருதத்தை பிராமணர்களுக்கே உரிய மொழியாகக் கருதுவது மூட நம்பிக்கைகளுள் ஒன்றாகும், ஐரோப்பியப் பாதிரிமார்கள் இந்தியாவில் புகுந்த ஆரம்ப காலத்திலே இந்துமத வைதிகர்களால் நீசர்களாகக் கருதப் பட்டார்கள். ஆனால், காலப் போக்கில் பெஸ்கி, மாக்ஸ்முல்லர், கால்டுவல் போன்ற ஐரோப்பியப் பாதிரிகள் சமஸ்கிருத மொழியைப் பயின்றனர். கால்டுவெல் தாம் பெற்ற தமிழ்—சமஸ்கிருதப் புலமை காரணமாகவே தென்னிந்திய மொழிகளைப் பற்றிய ஒப்பிலக்கண நூல்களைப் படைத்ததை அறியாத தமிழறிஞர் உண்டோ?

# சமஸ்கிருத வளர்ச்சித் திட்டம்

சமஸ்கிருதம் படித்த பண்டிதர்களிலே சிலரோ பலரோ உயர்வு மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதும் சமஸ்கிருதத்தின் மீது தமிழ்ப் புலவர்களுக்கு வெறுப்பு ஏற்படக் காரணமாகும் என்று சொல்லப்படுவ தெல்லாம் பழங்கதை. இப்போது ஆங்கிலம் படித்தவர்கள் உயர்வு மனப்பான்மை காட்ட வில்லையா? ஆங்கிலம் ஒன்றுதான் அறிவுமொழி என்று சொல்லி அவர்கள் தமிழை அவமதிக்கவில்லையா? ஆங்கில இலக்கியம் படித்து எம். ஏ பட்டம், பெற்றவர் தமிழ் இலக்கியம் படித்து எம். ஏ. பட்டம் பெற்றவரைவிடத் தம்மை உயர்ந்தவராகக் கருத வில்லையா? நாடு சுதந்தரம் பெற்று 35 ஆண்டுகளான பின்னரும் தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே தலைமை பெறுவ தற்குத் தடையாக இருந்து வருபவர்கள் ஆங்கிலம் படித்த பட்டதாரித் தமிழர்கள்தானே!

ஆங்கிலம் படித்தவர்களிடம் வெளிப்படும் ஆணவத்திற்காக நாம் எப்படி ஆங்கிலத்தை வெறுத்தொதுக்கக் கூடாதோ, அது போல, சமஸ்கிருதம் படித்தவர்களிலே சிலரிடம் காணப்படும் ஆணவத்திற்காக சமஸ்கிருதத்தை வெறுப்பது வாழ்க்கை நெறியாகாது.

நால் வருணங்களிலே நான்காம் வருணத்தவர் சமஸ்கிரு தத்தைப் படிக்கவோ பிறர் படித்துக் கேட்கவோ கூடாதென்று சொல்வோர் தம் காலத்திலும் இருந்தனர் என்று சுவாமி விவேகானந்தர் சொல்கிறார். அப்படிப்பட்டவர்களை 'பிசாசுகள்' என்றுகூட வெறுப்புணர்ச்சியுடன் ஆனால், வருணித்துள்ளார். பிற்காலத்தில் நிலைமை மாறிவிட்டது. ஐந்தாவது வருணம் என வருணிக்கப்பட்ட பஞ்சம வருணத்தவரான டாக்டர் அம்பேத்கர்

சமஸ்கிருதத்தில் நிறைபுலமை பெற்றவர். நால்வேதங்களைக் குறைவறப் பயின்றவர். தமிழகத்திலே சட்டமன்ற உறுப்பினராக விருந்த அரிசனரான சுவாமி சகஜானந்தர் சமஸ்கிருதம் பயின்றவர் என்று அறிகிறேன்.

கேரளத்தில் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்தவரான தவத்திரு நாராயண குரு என்பார், சமஸ்கிருதத்திலே பெரும் புலமை பெற்றிருந்தார். தாம் பெற்றதோடு தம்முடைய குலத்த வரான தாழ்த்தப்பட்டோருக்கும் சமஸ்கிருதம் கற்பிக்க பள்ளி களைத் தோற்றுவித்தார்.

தமிழ்நாட்டுப் பிராமணர்கள் ஆங்கில மோகத்திற்கு அடிமை யாகி சமஸ்கிருதக் கல்வியைக் கைவிடாதிருந்தால், "பிராமணரல் லாதா"ரும் சமஸ்கிருதத்தை விரும்பிப் பயின்று வந்திருப்பார் கள். சமஸ்கிருதத்தைப் புறக்கணிப்பதிலே பிராமணர்கள்தான் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள் என்று காஞ்சிப் பெரியவரான ஆசாரிய சுவாமிகள் கூறியிருப்பதையும் இங்கு சான்று காட்ட விரும்புகிறேன்.

> "தமிழ் நாட்டில் வேத பாடசாலைகளை வைத்து நடத்து வதில் பிராமணரல்லாதார் செய்திருக்கிற கைங்கர்யம் கொஞ்சம் நஞ்சமல்ல. நிலமாகவும், பணமாகவும் வாரிக் கொடுத்து, இந்தத் தர்மத்திற்குப் பரோபகாரம் செய்திருக் கிறார்கள். இப்போதும் கூட, ஏதோ அரசியல் காரணங்களுக் காக அவைதிகமான, நாத்திகமான அபிப்ராயங்கள் கொஞ்சம் தலை தூக்கியிருந்தாலும், மொத்தத்தில் தமிழ் ஜனங்களுக்கு உள்ளூற வைதிக சிரத்தையும் பழைய சாஸ் திர ஏற்பாடுகளில் பக்தி விசுவாசமும் போகவேயில்லை. என்பதுதான் என் அபிப்ராயம். அவர்களுடைய அன்புக்கு பாத்திரமாகிற மாதிரி பிராமணர்கள் மட்டும் இன்னும் கொஞ்சம் ஆசார அநுஷ்டானசீலர்களாக ஆகி விட்டால், இங்கே வேத ரக்ஷணம் நிரம்பவும் நன்றாக நடந்து விடும் என்பதே என் நம்பிக்கை."

("தெய்வத்தின் குரல்" — முதற்பகுதி: பக்.274)

இன்றைய நிலையில் விரும்புவோர் எவரும் அவரது சாதியும் மதமும் எதுவாயினும் சமஸ்கிருதம் பயில அரசின் கல்விக் கொள்கை அனுமதிக்கிறது. பாரதத்தின் மூத்த பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக் கழகத்திலே சமஸ்கிருதத்துக் கெனத் தனியாக ஒரு துறைகூட இருந்துவருகிறது. இது பல்கலைக் கழகங்களின் விதியாகி விட்டது.

இனி, தமிழ்-சமஸ்கிருத உறவு வளரவும் இந்த இருமொழி களிலும் தத்துவ நூல்களைப் பிழையறப் பயிலவும் ஆக்கவழியில் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப் பற்றியும் கவனிப்போம்.

சமஸ்கிருத மொழியிலுள்ள இலக்கியங்கள் பரவுவதற்குத் தமிழக அரசும் நடவடிக்கைகள் எடுக்க முடியும்-குறிப்பாக, அரசின் பொறுப்பிலுள்ள நூலகங்களிலே-சிறப்பாக, மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மத்திய நூலகங்களிலே சமஸ்கிருத நூல் கள் இடம் பெறுவதற்கு ஆணை பிறப்பிக்க முடியும்.

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவர் பொறுப்பில் நான் இருந்தபோது மத்திய நூலகத்திலும் தென் சென்னையிலுள்ள பிரதான நூலகங்களிலும் சமஸ்கிருத நூல்களை வாங்கி வைக்க ஏற்பாடு செய்தேன். இதுபோல, முஸ்லிம்கள் அதிகமாக வாழும் வட்டங்களில் இயங்கும் நூலகங் களில் உருது, அரபு மொழிகளிலுள்ள இலக்கியங்களை வாங்கி வைக்கவும் வழி செய்தேன்.

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் — குறிப்பாக, சென்னை-மதுரைப் பல்கலைக் கழகங்களில் சமஸ்கிருத இலக்கியங் கள் போதிய அளவு சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். அங்கெல்லாம் சமஸ்கிருதத்திற்கெனவும் தனியாக ஒருதுறை இயங்கி வருகிறதல்லவா!

இந்த நேரத்தில் தமிழ்-சமஸ்கிருதப் புலவர்களுக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மதவாதிகள் தன் தன்

மதமே சிறந்தது என்று சொல்வதால் மதங்களிடையே பூசல் ஏற்படுகின்றது. அதுபோல, மொழிப் புலவர்களும் தன்தன் மொழியே உயர்ந்தது என்று உரத்துக் குரல் கொடுத்துப் பேசுவதன் மூலம் மொழிப் பூசல் வளரக் காரணமாகி விடுகின்றனர். இதனைத் தவிர்க்க வேண்டும்.

சமஸ்கிருதப் புலவர்களிலே தமிழராக உள்ளவர்களுக்குத் தமிழ்தான் தாய்மொழி என்பதனை மறந்துவிட மாட்டார்கள் என்று நம்புகிறேன். தமிழ் அவர்களுடைய இன மொழி; சமஸ்கிருதம் அவர்களுடைய மத மொழி அல்லது கலாசார மொழி. இரண்டையும் இரண்டு கண்களாகப் புலவர்கள் கருத வேண்டும். இது என் கருத்து மட்டுமல்ல; 'மனோன்மணீயம்' என்னும நாடக நூலைத் தந்த சுந்தரனாரும் தமிழையும் சமஸ்கிருதத்தையும் இரண்டு கண்களாகக் கருதவேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார்.

## அங்கீகரிக்கப்பட்ட மொழி

சமஸ்கிருதம் இந்தியாவின் கலாசாரப் பொது மொழியாக இருந்து வருவதால், இந்திய மொழிகளிலே அதற்குரிய இடத்தைத் தரவேண்டிய கடமை இந்திய அரசினுடையதாக இருந்து வருகிறது. இருந்தும், அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப் பட்ட மொழிகளிலே சமஸ்கிருதமும் ஒன்றாக ஆரம்பத்தில் சேர்க்கப்படவில்லை. பேச்சு வழக்கிலுள்ள பிரதேச மொழிகளை மட்டுமே அரசியல் சட்டம் முதலில் அங்கீகரித்தது. ஆனால், தனக்கென ஒரு பிரதேசத்தைப் பெற்றிராத உருது மொழியையும் அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று இந்திய அரசு கட்டாயப்படுத்தப் பட்டது அதனால், சிறுபான்மையினர் மொழியான உருதுவும் மொழிப் பட்டியலில் இடம் பெற்றது அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஆண்டுகள் சில கழிந்த பின்னரே சமஸ்கிருதமும் மொழிப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

அதன் பின்னரும் சமஸ்கிருத மொழியை வளர்ப்பதற்குத் தனக்குரிய கடமையை இந்திய அரசு சரிவரச் செய்யவில்லை

ச—4

என்ற குற்றச்சாட்டு அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. இது எப்படியாயினும், சமஸ்கிருதம் அரசியல் சட்டப்படி அங்கீகரிக்கப் பட்ட மொழியாகியிருப்பது இந்துக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியதாகும்.

தமிழ் மொழியின் பெயரால் உலகந் தழுவிய மாநாடு நடை பெறத் துவங்கிய பின்னர் உலக சமஸ்கிருத மாநாடும் முதன் முதலாக புதுடில்லியில் நடைபெற்றது. அந்த நாட்களிலே நான் புதுடில்லியில் இருந்தபடியால் அந்த மாநாட்டின் சிறப்புகளைச் சரிவர அறிந்து கொள்ள என்னால் முடிந்தது. சமஸ்கிருதம் பேச்சு வழக்கில் இல்லாதது என்பதைப் பொய்ப்படுத்திக் காட்ட உலக சமஸ்கிருத மாநாட்டிலே பலர் அம்மொழியில் பேசினர். அதைப்பற்றி எனது கருத்தை முன்பே கூறினேன், சமஸ்கிருதம் பேச்சு மொழியாகவும் செய்யப்படுமானால். அதற்காக தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், வருந்தப் போவதில்லை; வரவேற்கவும் செய்வார்கள்.

சமஸ்கிருதமொழி விஷயத்திலே மாநில அரசுகளுக்கும் கடமை உண்டு. குறிப்பாக, தமிழக அரசுக்குரிய கடமையை மட்டும் இங்கு நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

## தமிழைப் புறக்கணிக்காமல்...

ஆரம்பக் கல்வி முடிந்த பின்னர் விரும்புவோர் சமஸ்கிரு தத்தை எடுத்துப் படிக்க அரசின் பாடத்திட்டத்திலே ஆட்டம் அசைவற்ற நிலையில் இடமளிக்கப்பட வேண்டும். பேச்சு வழக் கிலுள்ள தாய்மொழியை விட்டு சமஸ்கிருதத்தைப் படிக்க யாரேனும் விரும்பினால், அது அவர்களுடைய விருப்பம். ஆனால், அதிலுள்ள இழப்பை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும், அதனதன் மொழியே ஆட்சி மொழி யாகவும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போதனாமொழி யாகவும் நீதி மன்றங்களிலே நிர்வாக மொழியாகவும் வந்து

கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு தலைமுறைக்குள் அது முழுமை பெற்றுவிடும் என்ற நிலை உள்ளது. இந்த நிலையிலே பிரதேச மொழிக்குப் பதிலாக சமஸ்கிருதத்தை எடுத்துப் படிப்பதனால் ஏற்படும் இழப்பை அம்மொழியிடத்துப் பற்றுடையோர் எண்ணிப் பார்க்கவேண்டும்

முஸ்லிம்களிலேயும் ஒரு சாரார் தமிழைக் கைவிட்டு உருது அல்லது அரபு மொழியைப் படிக்க உரிமை பெற்றிருப்பதாக அறிகிறேன், அவர்களும் மேலே நான் தந்துள்ள எச்சரிக்கையை நினைவில் கொள்ள வேண்டும்.

இது எப்படியாயினும் சரி; உயர்நிலைப் பள்ளிகளில் சமஸ்கிருதம் விருப்பப் பாடமாக இருக்கவேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கு நியாயமில்லை. எந்த மொழியைக் கைவிட்டு சமஸ்கிருதத்தை எடுத்துப் படிப்பது என்பதை மாணவர்களின் பெற்றோர்களுடைய விருப்பத்திற்கே விட்டு விடலாம்.

தமிழகத்திலுள்ள ஆங்கிலக் கான்வென்டுப் பள்ளிகளில் ஜெர்மன், பிரெஞ்சு மொழிகள் கூட விருப்பப் பாடமாக வைக்கப் பட்டுள்ளன. பேச்சு வழக்கிலுள்ள தாய்மொழியைக் கைவிட்டு, இந்த நாட்டில் எங்கும் எவராலும் பேசப்படாத ஜெர்மன் மொழியையும் பிரெஞ்சு மொழியையும் படிக்கக் கூட தமிழின மாணவர்கள் அனுமதிக்கப்படுவது நியாயமானால், சமஸ்கிருத மொழியைப் படிக்க அனுமதிப்பதில் மட்டும் நியாயக்குறைவு எப்படி ஏற்படும்?

தேர்விலே அதிக எண்கள் கிடைக்கின்றன என்பதற்காகவே தமிழின மாணவர்கள் தமிழை விட்டு ஜெர்மனியையும் பிரெஞ்சையும் எடுத்துப் படிக்கிறார்கள் அந்த மாணவர்கள் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மூன்று இடங்களைப் பெற்றுப் பத்திரிகைகளில் பிரமாதமான விளம்பரத்தையும் தமிழக அரசின் பாராட்டையும்கூடப் பெறுகின்றனர். இந்த அளவுக்குத் தமிழகத்தின் கல்வி முறையிலே சறுக்கல் இருந்து வருகிறது. இதற்குப் பரிகாரமே இல்லைபோல் தோன்றுகிறது.

அடுத்து, எனது நினைவிற்கு வருவது திருக்கோயில்களின் அருச்சனையிலே சமஸ்கிருதத்திற்கும் இடம் இருக்கவேண்டும் என்பதாகும். அருச்சனை வழிபாடு தமிழிலும் நடைபெறுவதற்கு தடையில்லாத வகையிலே அர்ச்சகருக்கு சமஸ்கிருதத்தில் பயிற்சி அளிப்பது தமிழக அரசின்-குறிப்பாக, அறநிலையத் துறையின் கடமையாகும்.

## குழப்புகிறார்கள்!

மொழிவழிப்பட்ட இனத்திற்கும் ஆன்மிக வழிப்பட்ட மதத்திற்கும் நிச்சயமாக வேறுபாடு உண்டு. தாய்மொழிப் பற்றை அரசியல் லாபத்திற்குப் பயன்படுத்துவோர் இந்த உண்மையை அறியாதவர்களாக இருக்கின்றனர் இல்லையேல், அறிந்தே மதத்தின் மீதுள்ள வெறுப்பால் அருச்சனை மொழிப் பிரச்சினையை இனப் பிரச்சினையாக்கி, 'அரசியல்' நடத்துகின்றனர். மதத்தில் நம்பிக்கையுள்ள இனப்பற்றுளர்கள் இதிலே எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

ஒரு திருக்கோயில் எந்த மொழிக்குரிய பிரதேசத்தில் இருந்தாலும் அந்தக் கோயில எந்த மதத்தின் சார்புடையதோ அந்த மதத்தார் அனைவருக்கும் சொந்தமாகும். காசி விசுவநாதர் கோயில் இந்திமொழி வழங்கும் உத்தரப் பிரதேசத்திலிருந்தாலும் குமரி முதல் இமயம்வரை பரந்து வாழும் இந்துக்கள் அனைவருக்கும் அது சொந்தமாகும். அதுபோல, குமரி முனையில் உள்ள அம்மன் கோயிலும் இமயம் வரையிலுள்ள இந்துக்கள் அனைவருக்கும் சொந்தமாகும். அதனால், இந்துக்களுடைய பொது மொழியான சமஸ்கிருதமும் சைவ-வைணவ திருக்கோயில்கள் அனைத்திலும் பயன்படுத்தப்பட வாய்ப்பு இருக்க வேண்டும். இது மதம் சம்பந்தப்பட்ட விஷயமாகும்.

## சமஸ்கிருதத்தில் அருச்சனை

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கும் திருமலை வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கும் உலகின் எல்லாப் பகுதிகளிலும்

உள்ள இந்துக்கள் சென்று வழிபடுகிறார்கள். அதனால், விரும்பு வோருக்கு சமஸ்கிருதத்திலும் வழிபாடு நடத்திவைக்க திருக் கோயில் அருச்சகருக்கு சமஸ்கிருதப் பயிற்சி தேவைப்படுகிறது. அந்தப் பயிற்சிக்கு மாநில அரசின் பொறுப்பிலுள்ள அற நிலையத் துறைதான் வழி செய்து தர வேண்டும்.

சமயவழிப்பட்ட இலக்கியத் துறையிலேயும் சமஸ்கிருதத் திற்கும் தமிழுக்கு மிடையே நிலவி வரும் உறவானது இன்னமும் வலுப்படுத்தப்பட வேண்டும். இதற்குத் தமிழ்- சமஸ்கிருத- சொல்லகராதி ஒன்று தேவைப்படுகிறது. இதனை அண்மையில் நான் தஞ்சைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கூட்டத்தில் பேச நேர்ந்தபோது அங்கு குழுமியிருந்த பேராசிரியர்களுக்கும் துணைவேந்தர் டாக்டர் வி. ஐ. சுப்பிர மணியம் அவர்களுக்கும் நினைவூட்டினேன். துணைவேந்தரும் அப்படி ஒரு அகராதி தேவையென்பதை அங்கீகரித்ததுடன் தமது பல்கலைக் கழகம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் என்றும் கூறினார்கள்.

சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்களும் தமிழ்- சமஸ்கிருத தத்துவச் சொல்லகராதி ஒன்றைத் தயாரிக்கும் விருப்பம் தமக்கும் உண்டு என்று அறிவித்தார்கள்.

தஞ்சைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநரும் கலந்து பேசி இந்தப் பணியை ஒருமுகப்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். தமிழ்-சமஸ்கிருத தத்துவச் சொல் அகராதி எத்தனை பேருக்குத் தேவைப்படுகிறது என்பதை நான் மதிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. ஆனால், சமயத்தில் நம்பிக்கையுள்ள தமிழ்ப் புலவர்கள் பலருடன் நான் இதுபற்றிப் பேசியபோது அவர்கள் அனைவருமே என் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

திருமூலர் திருமந்திரம்—திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகள், சிவஞான போதம், மெய்கண்ட சாத்திரங்கள், இராமலிங்கரின் திருவருட்பா, தாயுமானவர் பாடல்கள் அருணகிரியாரின் திருப்புகழ் ஆகியவற்றிலே கலந்துள்ள வடமொழி தத்துவச் சொற்களுக்கு ஐயமறப்பொருள் காண்பது என் போன்ற சாமான்யர்களுக்கு அரிதாக இருக்கின்றது. பொருளை அறிந்து கொள்ளாமலே பாட்டை நெட்டுருச் செய்து பாடுவது தவளை சப்தமிடுவது போலத்தான். பொருளறிந்து பாடினால் தான் ஆன்மிக ரீதியில் புலன்களை ஒன்றுபடுத்தி பயன்காண முடியும்.

தமிழ்-சமஸ்கிருத உறவுபற்றி இன்னும் எவ்வளவோ சொல்ல என் மனம் விரும்புகிறதென்றாலும், இதிலே பிரசார பாணியைப் புகுத்த யான் விரும்பவில்லை. அதனால், அவசியமானவற்றை மட்டும் எடுத்துக் காட்டினேன்.

## சமஸ்கிருதக் கல்லூரியின் நிலை

சென்னை சமஸ்கிருதக் கல்லூரி தற்போது தனியார் உதவியால் இயங்கி வருவதாகத் தெரிகிறது. அதற்குப் போதிய அளவு உதவி புரிந்து அதனைத் தமிழக அரசு வலுப்படுத்த வேண்டும்,

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதியாக சென்னை சமஸ்கிருதக் கல்லூரியின் நிர்வாகக் குழுவில் சில ஆண்டு காலம் நான் அங்கம் வகித்தபோது அதன் பொருளாதார "வறுமை" நிலைகண்டு வருந்தினேன். அதற்கு அரசின் உதவியைக் கூடுதலாகப் பெற்றுத்தர அப்போது நான் பரிந்துரை செய்தேன். ஆனால், அது பயன்பட்டதாகத் தெரியவில்லை. இனிமேலும், அரசு கருணைகூர்ந்து தனது பண உதவியைப் பெருக்க வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பிரதிநிதியாக சமஸ்கிருத மொழி செல்வாக்குச் செலுத்தும் நிறுவனமாகிய அடையாறு கலாக்ஷேத்திரத்தின் நிர்வாக அமைப்பிலும் இடம் பெற்றேன்.

சென்னை சமஸ்கிருதக் கல்லூரியை விடவும் கலாக்ஷேத்திரத்தில் சமஸ்கிருதம் சிறப்பான நிலைமையில் இருந்து வருவதாகவே நம்புகிறேன்

வடாற்காடு மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களால் நடத்தப்படுவதான அரபுமொழிக் கல்லூரியையும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் குழுவின் தலைவனாகச் சென்று பார்வையிட்ட போது அதன் பணிநிலை திருப்திகரமாக இருப்பதறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

அதுபோல, சென்னை நகரிலும் வெளி மாவட்டங்களிலுமுள்ள சமஸ்கிருதக் கல்லூரிகளுக்கும் சென்று ஆய்வுக் குழுவின் சார்பில் பார்வையிட்டு, அவற்றின் நிர்வாகத்தை ஆய்ந்து பார்த்தபோது, அவை பெயரளவுக்கு நடந்து வருவதாகத்தான் தெரிந்தது. தமிழகத்திலுள்ள சமஸ்கிருதக் கல்லூரிகள் அனைத்தும் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் அவற்றிற்கு மேலும் அதிக அளவு பணஉதவி புரிய அது முனவர வேண்டும்.

இந்திய மருத்துவத்திலே ஆயுர்வேத மருத்துவம் சமஸ்கிருத மொழியோடு தொடர்புடையதாக இருந்து வருகிறது. ஆம்; சித்த மருத்துவம் தமிழ் மொழியோடும் அலோபதிக் மருத்துவம் ஆங்கிலத்தோடும் தொடர்புடையவையாக இருப்பது போலத்தான்!

நல்ல வேளையாக, சித்த மருத்துவமும் ஆயுர்வேத மருத்துவமும் இணைக்கப்பட்டு இந்திய மருத்துவக் கல்லூரியொன்று தமிழக அரசின் ஆதரவோடு இயங்கி வருவது மனதுக்கு ஆறுதலைத் தருகின்றது. ஆயினும், அலோபதிக் மருத்துவ முறைக்கு மக்கள் தரும் ஆதரவு இந்திய மருத்துவத்துக்குக் கிடைப்பதில்லை.

## வாழ்க, தமிழ்-சமஸ்கிருத உறவு!

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நான் சென்னை நகரிலுள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியைப் பார்வையிட்ட போது, அதிலே கணிசமான எண்ணிக்கையில் மலையாள மாணவர்களே இருக்கக் கண்டு வியப்புற்றேன். இதன் வளர்ச்சி குறித்தும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எனது தலைமையைப் பெற்றிருந்த ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அதற்குப் பலன் கிடைத்ததா என்பது எனக்குத் தெரியாது.

ஒரு தேச பக்தன்—தேசியவாதி என்ற முறையிலே இந்திய மொழிகளில் ஒவ்வொரு மொழியுமே அதனதன் நிலைக்கேற்ப வளர்ச்சியடைய வேண்டும் என்றும், அம் மொழிகள் ஆங்கிலத்திடம் இழந்துவிட்ட இடங்களைத் திரும்பவும் பெற்று வளத்தோடு வாழவும் வளரவும் வேண்டுமென்றும் நான் விரும்புகின்றேன்,

தமிழர்களிலே இந்திய தேசிய ஒருமைப்பாட்டில் உறுதியான நம்பிக்கை யுடையவர்கள் என் கருத்துக்களை ஏற்பார்கள் என்று நம்புகின்றேன். இன்று இந்தியாவில் சமஸ்கிருத தினம் கொண்டாடப்படுவதால், 'தமிழ்—சமஸ்கிருத உறவு வாழ்க' என்று வாழ்த்துகின்றேன்.

பூங்கொடி பதிப்பகம்

Wrapper Printed at : Eskay Art Printers, Madras-5.
Phone : 841478
Designed by P. N. Anandan